# திராவிடநாடு

2

24

## பொல்லாத புயல்

—☆—

பொல்லாத புயலேநீ தீமை காணும்
பொன்னான தமிழ்நாட்டை ஏன் வஞ்சித்தாய்?
இல்லார்மேற் படையெடுத்து வெற்றி கண்டாய்,
எவரேனும் அவ்வெற்றி மதிப்பா ருண்டோ!
வல்லார்கள் எளியாரை வஞ்சிக் கின்ற
வசைப் பேச்சுக் குபமானம் காட்டி னாயோ!
செல்லாத காசாகத், தீயிற் பஞ்சாய்ச்
செய்தாயே! நாமுனக்கென் தீங்கு செய்தோம்?

கோரத்தைக் காட்டிவிட்டாய், மாடி வீட்டுக்
கூரைகளைப் பிய்த்தெறிந்து, வேலை ஓய்ந்த
நேரத்தில் உழைப்பாளர் ஓய்வு கொள்ளும்
நினைப்போடு குடிசைக்குச் செல்வா, ரந்த
நேரத்தை நினையாது குடிசை யெல்லாம்
நிலமட்ட மாக்கிப்பின் வெள்ளக் காடாய்ச்
சீருற்ற பயிர்களையும் வாயிற் கவ்விச்
சிரிக்கின்றாய்! ஐயையோ கோரம்! கோரம்!

வீடிழக்கச் செய்தாய்பின், கட்டும் ஆடை
விலையுயர்ந்த பொருள்பலவும் கொள்ளை கொண்டாய்;
கேடிழைத்தாய் கேடறியா மக்களின் பால்!
கெட்டாலும் எம்மிடத்தி லுழைப் பிருக்கும்!
நாடிழக்க நேர்ந்தாலும் அஞ்சோம்! அஞ்சோம்!
நன்முயற்சி செய்தன்மேல் வெற்றி காண்போம்!
சீறிவந்த கொடும்புயலே உழைப்பில் வீரச்
சிங்கங்கள் எந்தமிழர், தெரிந்து கொள்வாய்!

(சோம. திருநாவுக்கரசு)




**தம்பி,**

புயலும் வெள்ளமும் விளைவித்த வேதனையும் பெருநஷ்டமும் குறித்த செய்திகள் வந்தவண்ணம் உள்ளன; நெஞ்சைப் பிளக்கும் செய்திகள்.

கிராமம் கிராமமாக அழிந்து போயின—குடும்பம் குடும்பமாக இறந்துபட்டுள்ளனர் — மீதமிருப்போர் இப்போது படும் துயரம் சொல்லுந்தரத்ததன்று.

எங்கு நோக்கினும் அழிவு—எப்பக்கம் பார்ப்பினும் பேரிடி, பெருநஷ்டம். ஏழை எளியவர்கள் வாழ்விலே வேதனைப்படுவதை பல காலம் கண்டு பாறை நெஞ்சினராகி விட்டவர்கள்கூட, பதறிப்போயுள்ளனர், இந்த அழிவு கண்டு.

பழந்தமிழகத்தின் திருவும் பண்பும் சிறந்து விளங்கிய பூம்புகார், கடலால் அழிந்த காதையைப் படித்துமட்டுமே நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம்; இப்போது, பெருமழையும் பேய்க்காற்றும் கூடி இழைத்துள்ள கொடுமைகுறித்த 'அழிவு' பூம்புகார் அழிந்துபட்டதை நினைவிற்குக் கொண்டுவருவதாக இருக்கிறது.

அரசு இழந்து, அதனால் வாழ்வு இழந்து, வளம் வகைப்படுத்தப் படாததாலும், உழைப்பின் பலன் சுரண்டப்படுவதாலும்,வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவித்துக் கிடக்கிறோம்; கொற்றம் இழந்தோம், கோலெடுத்தவனுக்கு ஏவலராகி இழிநிலை பெற்றோம்; விண்ணை அண்ணாந்து பார்த்து விம்முவோரும், மண்ணில் இரத்தக் கண்ணீர் சொரிவோரும், திகைப்பால் தாக்குண்டுக் கிடப்போரும், என்ற நிலைக்குத் துரத்தப்பட்டு, துயருற்றுக் கிடக்கிறோம்; இந்த அல்லலும் அவமதிப்பும் போதாதென்று, இயற்கையுமா நமது நாட்டைத் தாக்கிடவேண்டும்? கண்ணெடுத்துப் பாரீரோ! காரியமாற்ற வாரீரோ! எம் இனத்தின் பண்பறிந்து அதற்கேற்ற வாழ்வளிக்க இணங்கீரோ!—என்றெல்லாம், ஆதிக்கம் செலுத்திவரும் வடவரிடம், உரிமைக்குரல் எழுப்பி வருகிறோம். தங்கமும் தரித்திரமும், இரும்பும் இல்லாமையும், நிலக்கரியும் நொந்த வாழ்வும், வயலும் வறுமையும், என்றுள்ள வேதனைத் தொடரினை விளக்கி, மக்களை வீறுகொண்டெழச் செய்துவருகிறோம்; விடுதலைப் பேரார்வத்தையும் அறப்போருக்கான அஞ்சாமை, இடுக்கண் வருங்கால் இதயமொடிந்து போகாமை, ஆகியவற்றினையும் ஊட்டிடும் பெருமுயற்சியில் ஈடுபட்டுள்ளோம்; எங்கணும் வீர முழக்கம், எவரிடமும் விடுதலை வேட்கை; இந்த நிலை கண்டு பெருமிதம் கொண்டு, பெற்ற பொன்னாட்டின் விழிப்புணர்ச்சியைக் கண்டு இதயம் விம்மி, கண்களிலே களிநடமிடும் ஆர்வம் கண்டு, வெற்றிபற்றிய பெருநம்பிக்கை கொண்டு இறுமாந்திருக்கும் நேரத்தில், கொடுமையை வீசிற்றே கடல்! அழிவை ஏவிற்றே காற்று! பேயாகிவிட்டதே பெருமழை! என்செய்வோம்! எங்ஙனம் இதனைத் தாங்கிக்கொள்வோம். மூழ்கிவிட்ட கிராமங்கள், மிதக்கும் உடலங்கள், அவர்கள் உழைத்து உருவாக்கிய திரு அத்தனையும் அழிந்தநிலை! இந்தக் கோரக் காட்சியைக் கண்டு எங்ஙனம், உள்ளத்தில் எழும் குமுறலை அடக்கிக்கொள்ள முடியும்.

அண்ணா! சென்ற தடவை தாங்கள் இங்கு வந்திருந்த போது தங்கியிருந்தீர்களே, அழகான சோலை, அதன் நடுவே அமைந்திருந்த எனது இல்லம் இன்று அவை அழிந்துபோய் விட்டன. இந்தப் பகுதியில் நமது தோழர்கள் பெருத்த நஷ்டப்பட்டுப் போயுள்ளனர்; என் வேதனை சொல்லுந் தரத்ததல்ல," என்று நண்பர் பேராவூரணி அடைக்கலம் எழுதிய கடிதத்தில் என் கண்ணீர் சிந்திற்று. தம்பி! நான் அந்த அழகிய விடுதியில் தங்கியிருந்தபோது, நான் கண்ட செழுமைதான் எவ்வளவு! இன்று அழிவல்லவா காண்கிறார் நண்பர் அடைக்கலம். நானிருக்கக் குறை என்ன! என்று கேட்டு, நம்பிக்கை நாதத்தை மீட்டுவது போல, காற்றினிலே அசைந்தாடிய வாழையும் தென்னையும், அவைதமை வேலிகளாகக் கொண்டிருந்த செந் நெல்வயலும், அதனூடே சென்ற வாய்க்கால்களும், நடுவே இருந்த அழகிய விடுதியும், அங்கு அமர்ந்து எம்மை உபசரித்து, முகமலர்ச்சியை எமக்கு அளித்த அன்பன் அடைக்கலமும், —இன்று? எண்ணும் போதே, துக்கம் கரத்தைத் தடுக்கிறது, கருத்தைப் பிளக்கிறது, திவலை கண்களைக் கப்பிக்கொள்கிறது! இன்று அடைக்கலம், அழிவினை அல்லவா எங்கும் காண்கிறார். இப்படி அடைக்கலங்கள், பதின்மரா இருபதின்மரா, நூற்றுக் கணக்கிலா, இலட்சக் கணக்கிலல்லவா உளர்? என்ன செய்வோம்?

நிதி திரட்டுகிறோம், ஆடைகளைச் சேகரிக்கிறோம், உணவு திரட்டுகிறோம். எல்லாம் எற்றுக்கு? எல்லாம் இழந்து தவித்திடுவோர்க்கு, இவை எம்மட்டு? கணக்கறியும் போது கலக்கம் மேலிடுகிறது; ஏற்பட்டுப்போன உயிர்ச் சேதத்தை நினைக்கும்போது உள்

(14-ம் பக்கம் பார்க்க)

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 14] 18-12-55 [இதழ் 24

# புயலுக்குப் பின்

கோரப் புயலுக்கு இலக்கான பகுதிகளில், கண்ணீரைத் துடைக்கும் காரியங்கள் அவசர அவசரமாகச் செய்யப்பட்டு வருவதாக அறிகிறோம்.

புயலும், வெள்ளமும் விளைவித்திருக்கும் தழும்புகள் சீக்கிரத்தில் ஆறிவிடமுடியாது. அவ்வளவு தூரம் மக்கள், அல்லலுக்கும் ஆபத்துக்கும் இரையாகியிருக்கிறார்கள். எனினும், அவர்தம் கண்ணீரைத் துடைக்குமளவுக்காவது, நடவடிக்கைகள் எடுக்கப்படுவது குறித்து நமக்கு மகிழ்ச்சியே.

நாடு முழுவதுமுள்ள மக்களும் நல்லுள்ளம் கொண்டவர்களும், இதற்கெனத் திரட்டப்பட்டு வரும் நிதிக்கு தங்களாலியன்ற உதவிகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இவ்வளவு துரிதமாக, நிவாரணத்துக்கான முயற்சிகளும், நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டால்தான், ஒரு அளவுக்காவது உதவி செய்தவர்களாவோம். இடிந்த வீடுகள் ஏராளம்! பள்ளிக்கூடங்கள் பல கட்டப்படவேண்டும்! வாழ வழியற்றோர் அநேகம்—அவர்களுக்கு வழி காணப்படவேண்டும். ஆதரவற்ற அனாதைகளானோர் பலர்—அவர்களுக்கு நம்பிக்கை அளிக்க வேண்டும். நிலமெல்லாம் வெள்ளக்காடான விவசாயியின் கவலை போக்கப்பட வேண்டும்-இப்படி எண்ணற்ற பிரச்னைகள் கவனிக்கப்பட இருக்கின்றன.

இந்த நிலையில், அரசினருக்கு ஒரு யோசனையைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். ஆண்டாண்டு காலந்தோறும் பாம்பும், நண்டும் தேரையும் உலவும் சேரிகளில் கிடந்து அவதியுறும் ஆதித்திராவிடப் பெருங்குடி மக்கள், புயலாலும் வெள்ளத்தாலும் அடைந்த இன்னல்கள் சொல்லும் தரமல்ல; அவர்கள் வசிக்கும் பகுதி, ஊருக்கு ஒதுக்குப்புறம்—நீர் நிலைகளுக்கு அருகே சிறிது மழை பெய்தாலும் சதசதவென்றாகிவிடக்கூடிய பகுதி. அதோடு அவர்களுக்கும் சொந்தமில்லாதது.

அப்படிப்பட்டவர்களுக்கு உதவ, வெறும் கீற்றையும் முப்பது ரூபாய் பணத்தையும் கொடுத்துவிட்டால் போதாது. அதற்குப் பதில், அவர்களையெல்லாம், ஊருக்குள் கொண்டு வந்து — மேட்டுப்பாங்கான இடங்களில் — நல்ல வீடுகளைக் கட்டிக் கொடுத்து, இனிமேலாவது கொஞ்சம் 'நிம்மதி'யுடன் வாழும்படிச் செய்யும் வகைகளைச் செய்யவேண்டும். ஏனெனில் சாதாரண காலத்திலேயே அவர்கள் வாழ்வு—ஒரு 'நரகம்'. இப்போது சொல்லவும் வேண்டுமா — ஒரே சோக மயம்தான்.

புயல், போய் விட்டது — ஆனால், அது உண்டாக்கிவிட்டுப்போயுள்ள வேதனை, அவ்வளவு சீக்கிரத்தில் மறையக்கூடியதல்ல. ஆயினும், நம்மால் எவ்வளவு தூரம் இயலுமோ, அந்தளவுக்குப் பாடுபடுவோம். அந்த முயற்சிகளில், ஆர்வத்தோடு **பணமாகவும் பண்டங்களாகவும் உதவி வரும் நாட்டு மக்களையும், உறுதுணையாக யிருந்து பணிபுரியும் அதிகாரிகளையும், மீண்டும் பாராட்டுகிறோம்.**

**செய்யப்படும் நிவாரணங்கள், சீக்கிரமாகவும், நல்ல முறையிலும் நடைபெற வேண்டுமென காமராஜர் சர்க்காருக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.**

★

# பாழாகும் கதை!

''என்ன இருந்தாலும் எல்லூரான் சமையல் ஆகுமோ! வெகு தூரத்திலிருந்து வருகிறான், என்பதற்கே தனி மதிப்புண்டு ஐயா! உள்ளூர் மாடு எவ்வளவு உழைத்தாலும், வெளியூர் மாடென்றால் அதற்கிருக்கிற மவுசே அலாதி தான். பெரிய பண்ணை வீட்டுக் கலியாணம் என்றால், ஒவ்வொரு காரியமும் வருவோர் கண்ணையும் கருத்தையும் கவரவேண்டாமா? அதற்காகத்தான், எல்லூரானை வரச் சொல்லி, கடிதமும் பணமும் அனுப்பியிருக்கிறேன்'' என்றார், நல்லூர் மிராசுதார். அவருடைய வீட்டிலே அருமையான சமையற்காரன் இருந்தான். அந்த ஊரிலும் ஆளில்லாமலில்லை, சமைக்க. என்றாலும், அந்தஸ்தும் ஆடம்பரமும் விளங்கவேண்டாமா, ''மிராசுதார் வீட்டுக் கலியாணத்துக்கு சமையலுக்கு எங்கிருந்து வந்தார்கள் தெரியுமோ? எல்லூரிலிருந்து! என்ன செலவு தெரியுமோ? ரூபாய் ஐந்நூறு! கார் போய் அழைத்து வந்தது!'' என்று ஊரெல்லாம் பேசிக்கொள்ள வேண்டாம். அதற்காக வரவழைத்தார் எல்லூரானை! வீட்டிலிருக்கும் சமையற்காரரை அழைத்து, எல்லூரானுக்கு எடுபிடியாக இருக்கவேண்டும் என்று கட்டளை பிறப்பித்தார்!! கலியாணம் முடிந்துவிட்டது. இலைகளும் போடப்பட்டுவிட்டன. ''எப்படியிருக்கிறது சமையல்?''என்றுபார்ப்பதற்காகசமையற்கட்டில் நுழைந்தார், பண்ணையார்! சாம்பாரை எடுத்துக் கொஞ்சம் ருசித்தார்—ஒரே உப்பு! படுமோசமாயிருந்தது. 'என்ன ரசம்?' என்று கேட்டார். எல்லூர்சமையற்காரன்,பாகற்காயிலே ரசம் செய்திருந்தான், மிளகாய்ப் பொறியல்—இஞ்சி வறுவல்—**விளக்கெண்ணெய் பச்சடி—இப்படி விவரித்தான், தன்னுடைய சமையலைப்பற்றி. பண்ணையார், திகைத்தார். பணமும் பாழ்—மானமோ, கப்பலேறும்போலிருக்கிறதுவீட்டுசமையற்காரனைப்பார்த்தார், ''நான் இதைவிட நன்றாக செய்திருப்பேனே முதலாளி! நீங்கதான் என்னை நம்பவில்லையே!'' என்றான்,** வேதனையோடு. விருந்தினரெல்லாம், இலையில் உட்கார்ந்துவிட்டார்கள்! எப்படியிருக்கும், பண்ணையாரின் முகம்?

* * *

அந்நியர்களை விரட்டுங்கள்.

அவர்களுக்கு இடம் கொடுப்போமா?

கடலில் உருட்டிவிடுவோம்!

சுதந்திரம் வந்ததும், 'கல்தா' கொடுத்து விடுவோம்.

பிறகு இங்கென்ன வேலை அவர்களுக்கு?

*

''எதற்காக, அந்நிய நிபுணர்களை வரவழைக்கிறோமென்றால், இந்தியாவில் பல புதிய திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அதன் நுணுக்கங்களை அறிய, அந்நிய நிபுணர்கள்தான் தேவைப்படுகிறார்கள். அதனால்தான் அவர்களை அழைக்கிறோம்''

* * *

**சுதந்திரோதயத்துக்கு முன்பு, காங்கிரஸ்காரர்கள் எழுப்பிய கர்ச்சனையைக் கேட்டோர், இன்று நூற்றுக்கணக்கில் இங்கே கொண்டுவந்து இறக்குமதி செய்யப்படும் அந்நிய**

நிபுணர்களின் கூட்டத்தைக் கண்டால் ஆச்சரியமடையவே செய்வர். அவ்வளவு நிபுணர்கள்! எதற்கெடுத்தாலும் அந்நிய நிபுணர்கள்!! பத்தாயிரக் கணக்கில் சம்பளம்-பலவிதமான வசதிகள்—வெளி நாடுகளில் 'விலை' போகாதவர்களைக்கூட, அவசரத்தின் காரணமாக அழைத்து வந்து விடுகிறார்கள். படைக்கலங்களைத் தயார் செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்ட சுவிட்சர்லாந்து கம்பெனியினர், ஐந்து கோடி ரூபாய்களை ஏப்பம்விட்ட கதையை, எல்லோரும் அறிவர். அந்தக் கம்பெனியில், ஆராய்ச்சியில் 'அ' 'ஆ' தெரியாத அன்னியர்களெல்லாம், நிபுணர்களாக யிருந்தார்களாம்! ஆயிரம், பத்தாயிரம் என்று சம்பளம் வாங்கினார்களாம்!!-பார்லிமெண்டில், கேட்டபோது, அமைச்சர், 'ஆமாம்! ஆமாம்!' என்று ஒத்துக்கொண்டதும், உங்களுக்கெல்லாம் நினைவிருக்கக்கூடும்!

பெரிய பெரிய திட்டங்கள், தொழிற்சாலைகள் — முதலியவைகளை, இங்குள்ள சாமா சாஸ்திரிகளையும், சீமா அய்யரையும் கொண்டு செய்து முடித்துவிட இயலாது. இதனை, நேரு பண்டிதரின் குழாத்தைவிட நன்றாக அறிவோம். எனினும், இந்திய சர்க்கார் எந்தப் பெரிய திட்டங்களுக்குக் 'கால்கோல்' விழா செய்தாலும், அங்கே சீமாவும் சாமாவும்தான், பூணூல் மார்பிலே புரள, குடுமி காற்றிலே பறக்க, பஞ்சகச்சம் பழைய பரம்பரையைக் காட்ட, சூடம் கொளுத்தி பூஜை நைவேத்யங்களைச் செய்து, சாஸ்திர சம்பிரதாயப்படி காரியங்கள் செய்ய வருகின்றனர் — இரண்டு தினங்களுக்கு முன்பு நேரு பண்டிதர், ஆந்திராவில் 131 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் நாகார்சுன சாகர் அணைக்கட்டு கட்ட 'அஸ்திவாரக்கல்' நாட்ட வந்திருந்தது தெரியும், எல்லோருக்கும் — நேரு-அந்த நற்பணியைச் செய்யும் படத்தை எடுத்து அழகாகப் போட்டிருக்கிறது, 'மெயில்' ஏடு, தன்னுடைய டிசம்பர் 13ந்தேதி இதழில். புதிய திட்டங்களே என்னுடைய கோயில்கள்; அவைகளைக் கட்டி முடிப்பதே என்னுடைய பூஜை! —என்று சொல்லி வருகிறாரல்லவா, நேரு பண்டிதர்—அவருக்கு அருகிலே நிற்பது யாரென்று 'மெயில்' ஏட்டைப் பாருங்கள்-சனாதனி ஒருவர் நிற்கிறார்! சாஸ்திர சம்பிரதாயப்படி பூஜைகள் முடிந்த பிறகே, அந்த சாகருக்குக் 'கால்கோள் விழா' நடந்திருக்கிறதென்று, படம் சொல்லுகிறது.

வேதம் ஒருகையிலும், விஞ்ஞானம் ஒரு கையிலுமாக விளங்கும் 'அறிவாளி'கள்மிக்க இந்த நாட்டில்; வானளாவும் ஆலைகளை அமைக்கவும், விண்ணை முட்டும் தொழிற்சாலைகளைக் கட்டவும், நவீன இயந்திரசாலைகளை ஓட்டவும், நாகரீக வசதிகளை நடைமுறைக்குக் கொண்டுவருவது எப்படியென்று காட்டவும், அந்நிய நிபுணர்கள் அவசியம் தேவை.

அந்நியனென்றால் அடி, உதை என்று அன்று காங்கிரசார் கூவிய போது, இதனை மனதில் வைத்தே நாம் இடித்துரைத்தோம்.

இன்று, காங்கிரஸ் தலைவர்களே அந்நிய நிபுணர்களை அழைப்பது குறித்து, விளக்கம் விளக்கமாகத் தருகிறார்கள்.

அவர்கள் தரும் விளக்கப்படி, 'தெரியாத' காரியங்களைச் செய்ய, 'தெரிந்தவர்' உதவியை நாடிடுவதைத் தவறெனக் கூறவில்லை. ஆட்சியாளர் வேண்டுமானால், ஒருபக்கம் அந்நிய அறிஞர்களை அழைத்துக்கொண்டு அதே சமயத்தில் சாமாசீமாக்களின் சாஸ்திர பூஜைகளையும் நடாத்திய வண்ணம் இருமுகம் தாங்கிகளாய் இருக்கக்கூடும். நாம், அத்தகையவர்களல்ல—நல்ல விஞ்ஞான இரகசியங்களை அறிய, தெரிந்தவர்களைத் தேடுவதும் நாடுவதும் சிறிதும் பிழையற்றது என்போம்.

ஆனால், இந்திய ஆட்சியினர், தெரிந்தவர்களை நாடுகிறார்களா? தெரிந்ததாகச் சொல்லப்படுபவர்களை இழுத்து வருகிறார்களா!!—என்பதில் தான், பார்லிமெண்டிலிருக்கும் பல உறுப்பினர்களுக்கு, அடிக்கடி சந்தேகம் வருகிறது. அதனால்தான், ஐந்து கோடி பணம் செலவழித்தும், உருப்படாமற்போன ஆயுதத் தளவாடச் சாலையைப் பற்றிய விவாதத்தின் போது — கண்டித்தனர்; சர்க்காரிடமிருந்து, 'தவறு செய்துவிட்டோம்' என்று பதில் கிடைத்தது.

இப்போது இன்னுமொரு தகவல், கிடைக்கிறது.

நேரு பண்டிதரின் ஆட்சி, 'போலீகளை' இழுத்துவந்து பணத்தைக் கொட்டி அளப்பதுபோல், தேவையில்லாதவர்களையும் இழுத்துவந்து திண்டாடுகிறதாம்—கதையில் குறிப்பிட்ட, மிராசுதாரரைப்போல.

சமையலுக்குக்கூட, சொந்த ஊரில் ஆளிருக்கும் போது, வெளியூர் ஆள் வரவேண்டும் என்று எண்ணினார் மிராசுதார்! கடைசியில், ஏக்கம்கொண்டார்!! அதுபோலவே, நேரு பண்டிதரின் ஆட்சி, வீடு கட்டுவதற்குக்கூட வெளிநாட்டு நிபுணர்களை அழைத்து வந்ததாம்—'ரெடிமேட்' வீடு கட்டுவதற்காக. டில்லியில், அந்த முறைப்படி ஒன்பது வீடுகள் கட்டப்பட்டனவாம் — அப்படிக் கட்டப்படுவதற்கென்று இங்கிலாந்தில், சாலீஸ்பரி என்னுமிடத்திலுள்ள ரீமா கன்ஸ்டிரக்ஷன் கம்பெனியினர் டில்லியில் வந்து முகாம் அமைத்தார்களாம்.

இந்த வீடுகளையும், அவைகள் நமக்குச் சரிப்படுமா என்பதையும் மத்திய சர்க்காரின் மராமத்து இலாகா இன்சினீயர்கள் பார்த்து, "சர்க்காரே! இந்த வீடுகளுக்காக செலவு செய்யாதீர்கள்! வீண் வேலை. இதற்காக நிபுணர்களும், ஒரு கம்பெனியும் அவசியமே இல்லை,' என்று எச்சரித்தார்களாம்.

இவர்கள், வீட்டுச் சமையல்காரர்கள்தானே! அந்தஸ்தையும் ஆடம்பரத்தையும் காட்டிக்கொள்ள விரும்பும் மிராசுதார், ஒத்துக்கொள்வாரா!!

அதனால், அதிகாரிகளின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தவில்லை — ரூபாய் 13 இலட்சம் செலவிடப்பட்டது—பலனோ, பூஜ்யம்! டிசம்பர் 5ந் தேதி பார்லிமெண்டில் அமைச்சர் சுவரண்சிங் தெரிவிக்கிறார், "அதிகச் செலவாவதை உத்தேசித்து, அத் திட்டத்தைக் கைவிட்டோம்," என்று.

அதிகாரிகள் எச்சரித்ததாக யார் உனக்குச் சொன்னது? — என்று கேட்கக் கூடும், தோழர்கள்.

அந்த அமைச்சரே, பார்லிமெண்டில் வெளியிட்டிருக்கிறார்.

இரண்டு மூன்று அமைச்சர்களின் கமிட்டியொன்று இதுபற்றி ஆலோசனை செய்ய அமைக்கப்பட்டது.

அவர்களிடம், மத்திய மராமத்திலாகா, எச்சரித்தது.

எனினும், அவர்கள், எச்சரிக்கையைப் பொருட்படுத்தவில்லை, அமைச்சர்கள்.

அவர்கள் சொன்னது சரிதான் என்று இப்போது தெரிந்து கொண்டோம்.

இவ்வண்ணம் அறிவிக்கிறார், சுவரண்சிங்.

இப்போதுதான் தெரிந்துகொண்டார்களாம்! பதின் மூன்று லட்சம் பாழான பிறகுதான் பயனற்ற திட்டம் இது என்று புரிந்துகொண்டார்களாம்!

வீணடம்பரம்
போலி அந்தஸ்து
பிடிவாத குணம்

ஆகியவைகளின் காரணமாக காங்கிரசாட்சியில் 'கொண்டதே கோலம் கண்டதே காட்சி' என்று காரியங்களைச் செய்கிறார்கள், அமைச்சர்கள்.

அதிகாரிகள் எச்சரித்தாலும், அவைகளைப் பொருட்படுத்துவதில்லை!

தாங்கள் செய்கிற காரியம் உருப்படுமா—உருப்படாதா என்பது குறித்தும், தெளிவான முன்யோசனை இருப்பதில்லை!

அதனால், பாழாகிறது பணம்-பாழாகிக்கொண்டே இருக்கிறது.

★

தொடர் சித்திரம்

# அறுவடை

1

ஐரோப்பாவின் அழகுத் தொட்டிலான பாரிஸ் மாநகரத்தின் வீதிகளில் பரபரப்போடு சென்றுகொண்டிருந்தாள், அங்கெல். விழிகள், வழியில் ஏதாவது ஒரு விபத்துக்குள்ளாகிவிடுவோமோ என்று அலைந்தபடியிருந்தன. அக்கம் பக்கம் பார்த்தபடி, வேகவேகமாகச் சென்றுகொண்டிருந்தாள். அவளது பயத்துக்குக் காரணம், ஆ! ஊ!! என்று முழக்கமிட்டுக்கொண்டு திடீரென ஓடிவரும் மக்கள் வெள்ளமல்ல! புரட்சி வெடித்துக்கிடந்தபிரான்சில், இதெல்லாம் சாதாரணம். புரட்சிக்காரர்களுக்கு, சீமான்களின் மீதும், அவர்தம் சிங்காரிகளின்மீதும்தான் கண்ணே ஒழிய ஏழைகளின்மீதல்ல. அங்கெல், சீமான் வீட்டுச் செல்வியல்ல! போர் வீரனுடைய மனைவி!! அவளது கைபிடித்த வீரன் விடாரி, ஹாலந்து தேசத்திலே புதிதாக மலர்ந்த பிரெஞ்சுக் குடியரசுக்கு எதிராக முளைத்த சதிகாரர்களை அடக்கும் திருப்பணியிலீடுபட்டிருந்தான். ஆதலால், அங்கெல்லும் புரட்சிக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவள்தான். அவள் பயந்தது ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அல்ல. அவள் மிரண்ட காரணம் வேறு! மடியிலிருந்த ரொட்டியும் இறைச்சியுமே, அவளை, அப்படிப் பயப்படச் செய்தது.

* * *

லூயி ஒழிந்தான்! பிரபுக்களின் தலைகள்; சீவப்பட்டன! மக்களின் மனமும், தமக்குத் தீங்கிழைத்தோரைப் பழிக்குப் பழி வாங்கி வருகிறோம் எனும் திருப்திக்கு ஆளாகியிருந்தது, அவர்களது தலைவர்களாகயிருந்தோரே, இது நாள்வரை பிரபுக்களின் பீடமாயிருந்த அரச மன்றத்தை பிடித்துவிட்டனர். தூக்கு! சிறை! துண்டாடுதல் என்பதே, துரைத்தனத்தின் சட்டமாகப் பிறந்துகொண்டிருந்தது, போக போக்கியங்களில் மிதந்துகொண்டிருந்த பிரபுக்கள் எல்லாம் பயந்தனர்—சாவு, இப்போதோ, இன்னும் கொஞ்ச நேரத்திலோ என்று செத்துச் செத்துப் பிழைத்துக்கொண்டிருந்தனர். பிரான்சின் எல்லைகள் தோறும் கட்டுக் காவலைப் போட்டிருந்தது சுதந்திரசர்க்கார். அதனால் சீமான்களால் வெளிநாடு தேடியும் ஓடமுடியவில்லை-உள்நாட்டிலோ, வீரர்கள் வசம் சிக்கினால் நேரே தூக்கு தண்டனைக்குத்தான் ஆளாக வேண்டும் அவர்கள் கண்ணுக்கு அகப்படாமல் தப்பினாலோ, மக்கள் பிடித்துக் கொண்டுபோய் அதிகாரிகளிடம் ஒப்படைத்து, "ஏற்று இந்தச் சீமானை தூக்கு மேடையில்!" என்று சொல்கிறார்கள். இப்படி, பழிவாங்கும் படலம், வெகு வேகமாக நடந்துகொண்டிருந்த நேரத்திலே, நாட்டின் இன்னொரு பகுதி நரகமாகவே இருந்துகொண்டிருந்தது! சந்துமுனை, சாலையோரம், கலவரம் செய்பவன், கள்ளன், பசித்தவன், பயங்கரப் பாதகங்களுக்கு அஞ்சாதவன் எனும் கூட்டம் ஒரு பக்கம் இருந்துகொண்டேயிருந்தது! சாதாரண மக்களைப் போல அவர்களும், "சுதந்திரம்—சமத்துவம் — சகோதரத்வம்'' என்று கும்பலோடு சேர்ந்து கூவாமல் இல்லை. மத்தியதர வாசிகளைப் போலவே, அவர்களும், குடிஅரசு மலர்வதைக் கண்டு ஆனந்த மடைந்தார்கள்! லூயி ஒழிந்த நாளை அவர்களும் உற்சவம்போலக் கொண்டாடத் தயங்கவில்லை. ஆனால் தீர்க்கப்படவேண்டிய முக்கியப் பிரச்னை....பசி! அது, எப்போதும் போலவே, இருந்தது.

பசி! — அடங்கும் திட்டம், கிளம்பவில்லை, புதிய சர்க்காரிலிருந்து.

எல்லோருக்கும் உணவு!—இல்ல

---

பிரபுக்களின் கொட்டத்தை அடக்கி, மன்னனின் அட்டகாசத்தை ஒழித்து, குடியரசை நிறுவுவதற்காக பிரெஞ்சு நாட்டிலே புரட்சி பூத்தது.

லூயி, வீழ்த்தப்பட்டான்! அவனுடைய வமிசமும், கூண்டோடு அழிக்கப்பட்டது, ரொட்டித் துண்டுக்கும் கையளவு இறைச்சிக்கும் நாயாய் அலைந்த ஏழை மக்கள், இவர்களை அழித்ததை மாபெரும் சாதனையாக நினைத்தனர். அவர்கள் மனமெலாம், மகிழ்ச்சி நிறைந்தது!

வீணர்தம் பிடியிலிருந்து நாடு விடுதலை பெற்று விட்டது—வெற்றி! வெற்றி!! வெற்றி எட்டுத்திக்கும் எட்டக் கொட்டு முரசே!—என்று, பூபாளம் பாடினர், மக்கள்,

ஆனால், அந்த மக்களின் ஆர்வத்தால், 'தலைவர்' களாகியோரோ, தவறான பாதையில் சென்றனர்—தலையை அறுப்பதும், பிரபுக்களை ஒழிப்பதும்தான் பெரிதென எண்ணினரே யொழிய, புரட்சியின் பொருளை அறிந்திட மறந்தார்கள்.

அதனாலேயே அங்கு புரட்சி வெற்றி பெறவில்லை. அரசுக்கும், மக்களுக்கும் இடையே இருப்போர்களால் ஒரு நல்ல அரசை உண்டாக்க முடியவில்லை.

மன்னன் ஒழிந்து, நாடு 'குடியரசு' எனப் பிரகடனம் செய்யப்பட்டது. ஆனால், அந்தக் குடியரசு எவ்வண்ணம் இருக்கவேண்டுமென்று, ஏழையும் இல்லாதவனும் கனவு கண்டுகொண்டிருந்தானோ அந்தக் கனவு, நனவாகவில்லை! கருகிய மொட்டாகி விட்டது!!

இந்த அலங்கோலம் பற்றி, பிறகு ஏராளமான நூல்கள் எழுந்தன—பல ஆசிரியர்கள் நாவல்களாகவே தீட்டித் தள்ளினார்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகம்! ராபேல்சபேடினி என்பவரும், பிரெஞ்சுப் புரட்சியின் விளைவுகளைச் சித்தரிக்கும் வகையில் "அறுவடை" என்றொரு நூலைத் தீட்டினார். இத்தாலியில் 1875ல் பிறந்த இவர் தன்னுடைய பிற நூல்களிலும் பிரெஞ்சு புரட்சியைப்பற்றிக் குறிப்பிடத் தவறவில்லை. "இஸ்காரமோச்" என்று ஆங்கிலத்தில் வெளிவந்து பெயர் பெற்ற திரைப்படம், இவருடைய கதைதான்,

படித்தபோது, தமிழில் தரவேண்டும் என்று ஆசை பிறக்கக் காரணம்—பிரான்சு 18ம் நூற்றாண்டில் சந்தித்த நிகழ்ச்சிகளை, 'குடியரசில்' வாழும் நாமும் காண்கிறோம் என்பதுதான். இதில் வரும் பிரபும், அரசவை உறுப்பினனும் அப்போதுமட்டுமல்ல இப்போதும் இருக்கிறார்கள்! குடியரசுக்காக உண்மையாக உழைக்கும் போர் வீரனும் — குடியரசு என்ற பெயரால் சர்க்காரின் பணத்தை விரயம் செய்யும் வியாபாரக் கோமானும் அப்போது மட்டுமல்ல, இப்போதும் இருக்கிறார்கள்!!

அதனை எடுத்துக் காட்டுவதற்காகவே, இந்தச் சித்திரம் நமக்கேற்ற வகையில் தரப்படுகிறது—உண்மையான சுதந்திரம் நாடிப் போராடும் தோழர்கள் சுவைக்க.

★ அரங்கண்ணல்.

வில்லை, குடியரசு சர்க்காரால், கொடுக்க.

அரசன் ஒழிந்தானே ஒழிய, அவனை ஆட்டிவைத்த பிரபுக்கள் வெட்டி வீசப் பட்டார்களே தவிர, இன்னும் பிரபுக்களிருக்கிறார்களா என்று வேட்டையாடும் நிலையில் மக்கள் இருந்தார்களே ஒழிய, அதிகாரிகளும் குமாஸ்தாக்களும் ஏர் பிடிப்போனும் 'குடியரசாகிவிட்டது நாடு' எனும் களிப்பில் மிதந்து கிடந்தார்களே ஒழிய, நாட்டின் முக்கிய பிரச்னையான இல்லாமையும் ஏழ்மையும் இருந்தது. காது அறுப்பவனும், சந்துமுனையில் நின்றபடி வேட்டையாடுபவனும், கள்ளனும் இருந்துகொண்டிருந்தார்கள். அவர்களை, லூயிதான் உற்பத்தி செய்தவன். அந்த லூயி ஒழிந்தமைக்காக, குதூகலப் பண் பாடியவர்கள்தான் அவர்கள். ஆனால், பசிக்கும்போது என்ன செய்வது? பழைய தொழிலைத் தானே செய்யவேண்டும்!

* * *

இப்படிப் பட்டவர்களுக்காகத்தான் அங்கெல் பயந்தாள். அவளது மடியில் இறைச்சியும் ரொட்டியும் இருப்பது தெரிந்தால் போதும்; உடனே, ஒரு தாவு தாவி பிடுங்கிகொண்டு போய் விடுவார்கள். பறி கொடுக்க நேர்ந்து விட்டால், அங்கெல், அன்று முழுமையும் பட்டினிதான். ஏனெனில், தன்னுடைய சுதந்திரப் பிரஜை ஒவ்வொருவருக்கும் இவ்வளவு ரொட்டியும் இந்த அளவுள்ள இறைச்சியுமே வழங்கப் படும் என்று தெரிவித்திருந்தது, குடியரசு சர்க்கார். ரேஷன் முறை! அவுன்சு கணக்கில் உணவுப் பங்கீடு! மலர்ந்துள்ள மக்களாட்சிக்காக இந்தத் தியாகத்தைச் செய்யவேண்டுமென்று, தலைவர்கள் சொன்னார்கள். அப்படிச் சொல்லிய தலைவர்கள், ஆனந்தமாக உண்டு களித்துவிட்டுத் தான், இந்த உபதேசத்தைச் செய்தார்கள். அங்கெல், அவர்கள் உபதேசத்தை மதித்து, ஊர் முழுதும், வெற்றி! வெற்றி! என்று கூவவேண்டுமானாலும் தயார் — ஆனால், அவர்கள் சொல்லுவதைப்போல, 'சகோதரப் பிரஜைக்காக' தன்னுடைய ரொட்டியையும் இறைச்சியையும் தியாகம் செய்ய எள்ளளவும் தயாராக இல்லை. பசிக்குமே இந்தப் பாழும் வயிறு. அதனால், மடியிலிருக்கும் அன்றைய சாப்பாட்டுக்கு ஆபத்து வந்துவிடக் கூடாதே எனும் முன்னெச்சரிக்கையுடன், வீதியில் போய்க்கொண்டிருந்தாள்.

* *

சுதந்திர சர்க்காரில் ஒரு போர் வீரனாக—அதிலும் ஒரு கர்னலாக அவளது கணவன் விளங்குகிறான் என்பது அந்த வட்டாரத்திலிருப்பவர்களுக்குத் தெரியும். அதனால், என்ன. அவளுக்கு விசேஷ மரியாதையா கொடுக்கமுடியும்? சுதந்திர ஆட்சியில் அதிகாரிகள், 'பொதுஜன ஊழியர்கள் தானே! அதிலும், லூயி அழியக் காரணமாயிருந்தவர்கள் யார்? மக்கள் தானே. அதனால், அதிகாரியின் மனைவி என்பதற்காக மக்கள் யாரும் அவளுக்கு அந்தஸ்தை வழங்கத் தயாராக இல்லை. அவள், வெகுவேகமாக வீதிகளைக் கடந்து, தான் குடியிருக்கும் இடத்தை நெருங்கிவிட்டாள்! மாடியிலுள்ள தன்னுடைய அறையை நிமிர்ந்து பார்த்தபோது, அங்கேயுள்ள சன்னல் கதவுகள் எல்லாம் திறந்திருந்தன—திகைப்பு ஏற்பட்டது அங்கெலுக்கு. வெறிகொண்டலைந்த தேசபக்தர்களின் கையிலே சிக்காமலிருக்க எந்த இடமானாலும் அங்கு போய் ஒளிந்துகொள்ளத் தயங்குவதில்லை, பிரபுக்கள். அப்படியாராவது ஒரு பிரபு......! என்னமோபோலிருந்தது அவளுக்கு. மேற்குத் திசையில் சாய்ந்துகொண்டிருந்த கதிரவன், பாரிஸ் மண்ணில் சிந்திக்கிடக்கும் இரத்தத்தை அள்ளிப் பூசிக்கொண்டிருப்பது போல அவள் கண்ணுக்குத் தென்பட்டான். நாடு, குடியரசாக வேண்டியதுதான்—இத்தனை நாளும் கொடுமைகள் செய்தவர்களுக்குத் தக்க பாடம் கற்பிக்க வேண்டியது தான் — அதற்காக ஏன் இப்படி வெட்டி வீழ்த்தவேண்டும்? பலிபீடத்தில் ஒவ்வொரு நாளும் துண்டாடப் படும் தலைகள் ஆயிரமாயிரமாமே! துரோகிகள் என்று சொல்லி மக்களே வீதிகளில் வெட்டிச் சாய்க்கிறார்களாமே சீமான்களை. செச்சே என்ன இருந்தாலும் இந்த வெறியாட்டம் எனக்குப் பிடிக்கவில்லை.........என்று எண்ணியபடியே அறைக்குள் நுழைந்தாள். அங்கு உட்கார்ந்திருந்த ஆளைக் கண்டதும், அவளுடைய அழகு வதனத்தில் ஆச்சரிய ரேகைகள் படர்ந்தன! குன்றெடுக்கும்தோள் —அகன்ற நெற்றி — ஆழமான கண்கள்—இளமை ததும்பும் வயது—ராணுவ உடைகள், இத்தனையும் அணிந்தபடி அமர்ந்திருந்த அவனைக் கண்டதும், திகைத்துப்போனாள், அங்கெல்! சற்றும் எதிர்பாராதபடி எங்கே வந்தான் அவன்? என்ன அப்படி அவசர காரியம்? ''அன்பே!'' என்று ஓடி அவனை, அணைத்துக்கொண்டாள் ''விடால், என் உயிரே! நீங்கள் வரப்போவதாகக் கடிதம் கூட எழுதவில்லையே......''

''முக்கியமான வேலையாக வந்தேன் அங்கெல்......பிறகு விபரம் சொல்லுகிறேன், மிகவும் களைப்பாயிருக்கிறது''

வெகு தூரத்திலிருந்து பிரயாணம் செய்தவனாதலால் விடால், களைத்துப் போயிருந்தான். அதைத் தெரிந்து கொண்ட, அங்கெல், அவனுக்கான உணவைத் தயாரிப்பதில் முனைந்தாள். கடையில் வாங்கி வந்த ரொட்டியையும் இறைச்சியையும் பக்குவம் செய்து ஒரு தட்டில் கொண்டு வந்து வைத்தாள்.

''என்ன அங்கெல்! இரண்டு பேருக்கு இவ்வளவுதானா!''

''இரண்டு பேருக்கு அல்ல, விடால் உங்கள் ஒருவருக்கு மட்டும்தான்!''

''எனக்குக்கூட இது எப்படிப் போதும்? சிட்டுக் குருவிக்குக்கூட இந்த உணவு போதாதே! ஏன், வீட்டில், உணவே இல்லையா? வாங்க, பொருள் இல்லையா?''

''சர்க்கார் அளக்கும், படி இவ்வளவு தான். இதைக் கொண்டு என்னைப் போன்ற ஒவ்வொரு பிரஜையும் வாழ வேண்டும்......''

''எப்படி முடியும் இது?''

''............முடியவில்லை. அதனால் தான், திருட்டுத்தனமாக தினசரி கொஞ்சம் வாங்கிக்கொள்ளுகிறேன். கூடைக்காரி, இன்னும் கொஞ்சநேரத்தில் வருவாள். நீங்கள் இதைச் சாப்பிடுங்கள்''

விடாலுக்கு, ஏன் குடியரசு சர்க்கார் இப்படி 'அவுன்சு' அளவில் உணவு போடுகிறது என்பது புரியவில்லை! உணவை அருந்தியபடியே, அவளிடம் பேசலானான்......''ராஜீயபாஷையில் சொல்லவேண்டுமானால், நான் தூது வந்துள்ளேன், அங்கெல்! அவ்வளவு முக்கியமான இரண்டு விஷயங்களைக் கவனித்து வருமாறு என்னை படைத் தலைவர் அனுப்பியுள்ளார். முதலாவது—ஹாலந்தில் போரிட இன்னும் வீரர்கள் தேவைப்படுகிறார்கள்; அவர்களைச் சேர்த்துக்கொண்டு திரும்பவேண்டும், நான். அநேகமாக இதற்கு ஒரு வாரம் பிடிக்கலாம், இரண்டாவது—ஒரு அயோக்கியனைப் பற்றி தேசிய அசெம்பிளிமுன் புகார் செய்யவேண்டும்......'' அவன் சொல்லிக்கொண்டிருப்பதைக் கூர்ந்து கவனித்து வந்த அங்கெல், வேறு திசையில் கண்களையும் கருத்துக்களையும் செலுத்தவே, அவன் நிறுத்தினான்.

''அங்கே என்ன பார்க்கிறாய் அங்கெல்?''

''அவள் வந்துவிட்டாள், விடால்! அவள் வந்துவிட்டாள்!''

''யார் வந்துவிட்டாள்...''

''அதோ! அவள் போடுகிற சப்தம் கேட்கவில்லை?''

சப்தம் கேட்டது, விடாலுக்கு. வீதியில், யாரோ ஒரு மாது, ''பழைய துணிகள் வாங்கலியோ! பழைய துணிகள்!'' என்று கூவிக்கொண்டுபோவது கேட்டது. அங்கெல், அவசர அவசரமாகக் கிளம்பினாள்.

"அவள் பழைய துணி அல்லவோ விற்கிறாள், அங்கெல்?"

சிரித்தாள், அவள். விடால் அப்படிக் கேட்டது, அவளுக்கு நகைப்பை உண்டாக்கிற்று.

"விடால்! வீதியில் அவள், ரொட்டி இறைச்சி வேண்டுமா? ரொட்டி இறைச்சி—என்று கூவினால், கம்பி எண்ணவேண்டும் தெரியுமா? அதனால்தான் இப்படிக் கூவுகிறாள்" என்று தெரிவித்துவிட்டு, வேகமாகப் படிகளில் இறங்கிச் சென்றாள்.

அழகு நடந்து செல்வதுபோல இருந்தது அவனுடைய கண்களுக்கு! மனமோ, எங்கெங்கோ அலைய ஆரம்பித்தது.

"அழகு மனைவிகளைக் கூடவிட்டு விட்டு, போர்க்களம் சென்று நாம் போரிடுகிறோமே, பூத்திருக்கும் குடியரசைக் காப்பாற்ற? அந்தக் குடியரசின் நரம்பு நாடிகளான மக்கள் இப்படிச் சோற்றுக்குமா திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்? பிரபுக்களையும் மன்னன் லூயியையும் ஒழித்து விட்டால் பாலும் தேனும் ஓடுமென்றார்களே தலைவர்கள் — வறுமையல்லவோ இன்னும் வாட்டி எடுப்பதாகச் சொல்கிறாள் அங்கெல்! 'அவுன்சு' கணக்கிலன்றோ, அளந்து கொடுக்கிறார்களாம், சாப்பிட. அது போதாமல், திருட்டுத்தனமாக வல்லவோ வாங்கிச் சாப்பிடுகிறார்களாம்! கள்ள வியாபாரம் செய்ய ரொட்டியும் இறைச்சியும் கிடைக்கும் போது, கோலோச்சும் குடியரசுத் தலைவர்களுக்கு மட்டும் உணவுப் பொருள் இல்லாமல் எங்கே போய் விட்டது? இந்தப் பிரச்னையைத் தீர்க்காமல், என்ன செய்கிறார்கள் சுதந்திர ஆட்சியை உண்டாக்கியவர்கள்! இப்படி மக்கள் எல்லாம் அல்லாடத்தானா, ஆசைக் கோட்டைகளை வளர்த்து விடுதலைப்பெறத் துடித்தார்கள்?" என்று எண்ணியபடி, அமர்ந்திருந்தான் அறையில்.

* * *

அப்படியும் இப்படியும் பார்த்துக் கொண்டு, கூடைக்காரி அங்கெல் கேட்ட உணவுப் பொருள்களையெல்லாம் எடுத்துக் கொடுத்தாள். அவளுடைய கூடைக்குமேல், ஏராளமான பழைய துணிகள் கிடந்தன. அதிகாரிகளின் கண்ணை மயக்கவே, அந்தத் தந்திரம்! அதற்கு அடியில், முட்டை, ரொட்டி, இறைச்சி எல்லாம் இருந்தது. வேண்டியவைகளை வாங்கிக் கொண்ட அங்கெல், 'இந்தா' என்று நோட்டை நீட்டினாள். கூடைக்காரி சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே, பொருள்களின் விலைபோக மீதியைக் கொடுக்க, சில்லரையை எண்ணலானாள். அதே சமயத்தில், அங்கெலையும் அவளையும் திகைக்கவைத்தது, ஒரு கூச்சல். இருவரும், பரபரப்படையலாயினர். ஏனெனில், அந்தக் கூச்சலின் பொருளை, அவர்கள் அறிவர்! விடுதலை பெற்ற மகிழ்ச்சியில் துள்ளும் மக்கள் வசம் யாரோ ஒரு பிரபு சிக்கிக்கொண்டான் போலிருக்கிறது—அவனைத் துரத்திக் கொண்டு ஓடி வருகிறார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டனர். விடாதே! பிடி! வெட்டு! குத்து!—என்று, மக்கள் போட்ட கூச்சல் வரவர நெருங்கிக்கொண்டேயிருந்தது.

கூடைக்காரி உடனே அந்த இடத்தை [வி]ட்டு நகர்வதற்காக, பழைய துணிகளைப் போட்டுக் கூடையை மூடலானாள், "மீதி சில்லரையை வேண்டுமானால் பிறகு கொடம்மா." என்று சொல்லிவிட்டு, அந்தக் கும்பல் வருவதற்குள் வீட்டுக்குள் போய்விடலாம் என்று கிளம்பினாள், அங்கெல். வீட்டுக்குள் நுழைந்து கதவுகளை மூடுவதற்கு முன்பு, வியர்த்து விறுவிறுக்க ஒருவன் ஓடிவந்து உள்ளே புகுந்து கொண்டு, கதவுகளையும் சாத்திக் கொண்டான். அவனுடைய நடவடிக்கைகளைக் கண்ட அவளுக்கு எதுவும் புரியவில்லை. சிறிதுநேரம் மரக்கட்டையைப்போல நின்றாள். தூரத்தே, மக்கள் போட்டுக்கொண்டு வந்த கூச்சல், வெகுவேகமாக நெருங்கிக்கொண்டிருந்தது. அவனோ, அவள் எதிர்பாராதவிதமாகக் கதவுகளை மூடி தாழ்ப்பாளையும் போட்டுவிட்டான். அவனுடைய இந்தச் செய்கை, அவளை எரிமலையாக்கிற்று. ஒரு ஆடவன்—வெகு துணிச்சலோடு — அதுவும் ஒரு பெண்பிள்ளைக்கு எதிரில் — கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போடுவதென்றால்...? என்று நினைத்தபோது, அவள் அங்கமெலாம் பதறியது.

பரவிக்கொண்டிருந்த இருளின் காரணமாக அவன் யாரென்பது அவளுக்குத் தெரியவில்லை. யாராயிருந்தாலென்ன! என்று எண்ணிய அவள், கதவுகளைத் திறந்தாள், "போ, வெளியே!" என்று கத்தினாள். அவன் விட்ட பெருமூச்சுகள் அவன் ஏதோ மாபெரும் ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறானென்று உணர்த்திற்று. அந்த அவசரத்தோடு சொன்னான், அம்மா! தாயே! என்னை எப்படியாவது காப்பாற்றி விடுங்கள். உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு. உங்கள் காலில் விழுகிறேன். அந்தக் கும்பலிடம் என்னைக் காட்டிக் கொடுத்து விடாதீர்கள். உங்களை விட்டால், எனக்கு வேறு வழியில்லை. கொஞ்ச நேரம், இப்படி ஒளிந்து கொள்ளுகிறேன்—அந்தக் கூட்டம் போன பிறகு ஒரு கணமும் இங்கே நிற்கமாட்டேன் ஓடிப் போய்விடுவேன் அம்மா! என் மீது கொஞ்சம் கருணை வையுங்கள். இந்த அபாக்கியவானைக் காப்பாற்றுங்கள்," என்று கெஞ்சினான் 'ஐயோ! அவர்கள் வருகிற காலடி கேட்கிறதே அம்மா! அம்மா!!' என்று அவசரப்பட்டான்.

அங்கெலுக்கு ஒன்றும் புரியவில்லை! கூவலிலிருந்து அவனோர் இளைஞனாயிருக்கவேண்டுமென்பதைத் தெரிந்துகொண்டாள் — அவனைத் துரத்திக்கொண்டுவருவோர், அருகில் வந்துவிட்டார்கள் என்பதும் புரிகிறது. அந்த வீட்டுக்கு அருகிலேயிருந்த மூலையைக் கடந்து அவன் வேகமாக ஓடிவந்து இங்கே புகுந்து கொண்டிருக்கிறான் என்பதும் அவளுக்குப் புரிந்தது. மக்கள் விரட்டிக் கொண்டு வருவதிலிருந்து, நிச்சயம் அவன் ஒரு பிரபுவாயிருக்கவேண்டும் —அல்லது குடியரசுக்கு விரோதியாயிருக்கவேண்டும் என்பதும் விளங்கிற்று. என்ன செய்வது? அவள் விரும்பினால், அவனைக் காப்பாற்றவும் செய்யலாம் — கண்டதுண்டமாக மக்கள் வெட்டியெறியும்படியும் செய்யலாம். அவனோ, 'ஐயோ, அம்மா, அம்மா' என்று அவசரப்பட்டான்.

(தொடரும்)

## பொங்கல் மலர்

## சந்தாதாரர்கள் கவனத்துக்கு

இவ்வாண்டுப் பொங்கல் மலரின் விலை ரூ. 1-8-0 ஆகும். முன் பணமாக ரூ. 1—8—0 அனுப்புகின்ற சந்தாதாரர்களுக்குமட்டும்தான் மலர் அனுப்பப் படும். மலர் தவறிவிடாமல் கிடைக்கவேண்டுமென்று கருதி, ரூ. 1—15—0 அனுப்புகிறவர்களுக்கு, பதிவுத்தபால்மூலம் அனுப்பப் படும்.

பொறுப்பாளர்.

# கடவுளின் கவலை!

"பார்வதி! பார்த்தாயா, இந்தப் பாபாத்மாக்களை. நம்மை, ஆண்டாண்டுகாலமாகப் படுத்துகிறபாடு போதாதென்று இப்போது வேறு இழிவும் பழியும் உண்டாக்குகிறார்கள். வேதாரண்யம்! திருமறைக்காடு, என்பர் சைவர்கள். பாடல் பெற்ற ஸ்தலம். திருத்துறைப்பூண்டிதான், என்ன சாமான்யமா? ஊர் முழுதுமே, கோயிலுக்குத்தான் சொந்தம்! திருவாரூர், தியாகேசனின் இருப்பிடம்! புதுக்கோட்டை, புவனேஸ்வரி வாழ்கிறாள்! மதுரையம்பதியோ, உனக்கும் எனக்கும் உறைவிடம். எந்த ஊரில்தான் நமக்குக் கோயில் இல்லாமலிருக்கிறது — பெரிய கோயில், சின்னகோயில்—அடடா! தஞ்சை மாவட்டம், சாதாரணமானதா எங்கு பார்த்தாலும் கோயில்கள்தான்......"

"எதைப்பற்றி, நாதா, இப்படி விசனத்தோடு பேசுகிறீர்கள்?"

"எதைப்பற்றிப் பேசப்போகிறேன், பார்வதி, சமீபத்தில் இந்த வாயுவும் வருணனும் புகுந்து அக்கிரமம் செய்திருக்கிறார்களே, அதைப்பற்றித்தான் பேசுகிறேன்........"

"அதைப்பற்றிக் குறிப்பிடவந்த நீங்கள், பாபாத்மாக்களைப்பற்றியல்லவா, வேதனையோடு குறிப்பிடுகிறீர்கள்?"

"ஆமாம், பார்வதி! இப்படி ஊருக்கு ஒவ்வோர் கோயிலிருந்தும் அங்கிருக்கும் சாமிகளுக்கு ஸ்தல புராணங்களிருந்தும், அவர்களுடைய சக்தியைப்பற்றி இத்தனை நாள் பெருமையாகப் பேசப்பட்டு வந்தும், புயல் வீசி மழைகொட்டி ஆயிரக்கணக்கானோர் சாகவும், பல லட்சம்பேர் பதைக்கவுமானக் கோரக் காட்சிகளைப்பற்றிக் கண்ணீர் வடிக்கும் சேதிகள் வந்துகொண்டிருக்கும் நேரத்தில், இந்தப் பாபாத்மாக்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா?"

"எந்தப் பாபாத்மாக்கள் பிரபு, நாஸ்திகர்கள் என்று ஏசப்படுகிறார்களே, அந்த சுயமரியாதைக்காரர்களா........"

"அவர்கள் எவ்வளவோ நல்லவர்கள் என்று நான் உனக்கு அடிக்கடி சொல்லுவதுண்டே, அவர்கள் அல்ல, தேவி—புயலையும் மழையையும் கண்டு, மனந்துடித்துப்போய், மனிதாபிமானத்துடன் ஓடி ஓடி அலைகிறார்கள் மக்களுக்கு உதவி செய்ய. ஆனால், பக்தர்கள் என்று சொல்லிக்கொண்டு திரிகிறார்களே, பூலோகத்தில் — அந்தப் பாபாத்மாக்கள்தான் பார்வதி, நமக்கு இழிவும் பழியும் கொண்டுவருகிறார்கள் ..........."

"பக்தர்களைப்போய் பாபாத்மாக்கள் என்கிறீர்களே, நாதா?"

"சங்கடம் வந்த நேரத்தில், காட்டிக்கொடுப்பவனை நீ என்னவென்று சொல்லுவாய்?"

'கயவன், என்பேன்!"

உண்மை புரிந்தும் ஊரை ஏய்ப்பவனை..."

"எத்தன்!"

"ஊரே எரியும்போதும், பீடிக்கு நெருப்பு கேட்பவனை..."

"மூடன், எனலாம்!"

"இதையெல்லாம் சேர்த்துத்தான், நான் பாபாத்மா, என்றேன்! பார்வதி, இதோ, பார்—பட்டினிக் கிடக்கும் குடும்பங்களை — அதோ, உடலுப்பி அழுகிக்கிடக்கும் பிணங்களைக் கண்டாயா—ஆடு மாடுகள் எத்தனை ஆயிரம் செத்துக் கிடக்கின்றன—தண்ணீருக்குள் மிதக்கும் வீடுகள்—வெள்ளம்போல் நீரிருந்தும் குடிதண்ணீருக்கு அவதிப்படுகிற கூட்டம்—அடடா! என்ன கொடுமை, கண்ணீர் வருகிறதல்லவா, உனக்கு? இப்படிப்பட்ட சமயத்தில், தங்கள் தங்களால் இயன்றதை உதவி செய்வதா—அதற்குப் பதில் என்னை இழுத்துக்கொண்டுபோய்விட்டு சந்தி சிரிக்கச் செய்வதா?"

"அப்படி என்ன செய்தார்கள் நாதா?"

"பக்தர்கள், என்னுடைய பிரதாபத்தை, இந்த நேரமாகப் பார்த்துப் பேசுகிறார்கள், தேவி! பாரேன் இதோ—கும்பகோணத்துக்கருகில் மாங்குடி என்றூராம். அங்கே, ஒரு கோயிலாம். மழைக்குப்போய் ஒண்டினானாம், ஒரு பையன். அவனை ஒரு தேள் கொட்டிற்றாம்! அலறியடித்துக்கொண்டு ஓடினானாம்—அவன் அப்படி ஓடிய கொஞ்ச நேரத்துக்கெல்லாம் இடியும் புயலும் வரவே, அந்தக் கோயில் மடமடவெனச் சாய்ந்ததாம் தேள் கொட்டியிராவிட்டால், பையன் ஓடியிருக்கமாட்டான்! இடிந்து விழுந்த கோயிலுக்குள் சிக்கியிருப்பானல்லவா! அதனால் அவனை தேள் ரூபத்தில் போய் காப்பாற்றிவிட்டேனாம்! அதற்காக, அபிஷேகம் ஆராதனை எல்லாம் செய்திருக்கிறார்கள்......"

"அது எப்படி, பாபகாரியமாகும் பிராணநாதா? நமக்குத் தரும் 'சர்டிபிகேட்தானே, அது!"

"சரிதான், போ! அதே சமயத்தில் அருப்புக்கோட்டைக்குப் பக்கத்திலுள்ள மானூரில் என்ன நடந்திருக்கிறது, தெரியுமா?"

"அங்கும் இப்படி ஏதாவது 'காக்கை ஓட பனம்பழம் விழுந்த கதை' நடந்துள்ளதோ?"

"அதுதான் இல்லை! வெள்ளம் வந்துவிட்டது. அந்த ஊர் மக்கள் பயந்துபோய், அங்கிருந்த சுப்பிரமணியர் கோயில் ஒன்றுக்குள் புகுந்துகொண்டார்களாம். கொஞ்ச நேரத்தில் அந்தக் கோயில் இடிந்து விழுந்து அத்தனை பேரும் நாசமாகியிருக்கிறார்கள்!"

"ஐயோ! அப்படியா?"

"ஆமாம், தேவி! அதே சமயத்தில், இன்னொரு சேதி, வந்திருக்கிறது பத்திரிகைகளில், கூடலே

ஊருக்குள் புகுந்ததல்லவா, வேதாரண்யத்தில் — புயல் ஓய வேண்டுமென்று ராமபஜனை செய்தார்களாம் அங்கு! பிறகுதான் புயல் ஓய்ந்ததாம்!”

“எனக்குக்கூடச் சிரிப்பு வருகிறது, நாதா! கேட்கும்போது”

“உனக்கு சிரிப்பு வருகிறது—உன்னைப் பார்த்து, “ஏம்மா, பார்வதி! சீர்காழி குளக்கரையில் அழுத குழவியாம் ஞானசம்பந்தனுக்குப் பாலூட்டப் போனாயே, இப்போது எங்களுடைய குழந்தைகளுக்கும் கொஞ்சம் வந்து கொடேன்!” என்று கேட்டால்,—உனக்கும் எனக்கும் இருக்கட்டும்-நமது பக்த கோடிகளுக்கு எவ்வளவு கோபம் வரும்?”

“கிருபானந்தவாரியாரும் குன்றக்குடிகளும் ‘ருத்திரமூர்த்தி’களாகிவிடுவார்களே!”

“அவர்களைப்பார்த்து இந்த சுயமரியாதைக்காரர்கள் இப்போது கேட்டால், என்னபதில் சொல்லுவார்கள்? ஏன், பார்வதி! எனக்கே வெட்கமாயிருக்கிறது —இராமேஸ்வரம், ஜனாதிபதி ராசேந்திரபிரசாத்தே வந்து வணங்கிய இடம்—கும்பகோணம், கூடிய விரைவில் மகாமகம் நடைபெற இருக்கிறது; சர்க்காரே விசேஷ சிரத்தையெடுத்துக்கொண்டிருக்கிறது; திருச்சியிலே தாயுமானவர் இருக்கிறார்—அவர் கதைதான் தெரியும் உனக்கு வெள்ளத்தால் தவித்த தாய்க்கே அருள்பாலித்ததாக புராணீகர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள் —காரைக்குடி, பரமக்குடி, பட்டுக்கோட்டை நாடியம்மன் பிரசித்தம் பெற்றவள்—இப்படி, கோயிலில்லா ஊர் எங்கே உண்டு. பழமொழியேயிருக்கிறது, கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்று. இவ்வளவு இருந்தும் ஏனய்யா புயலும் மழையும், என்று கேட்டால் என்ன பதில் சொல்லுவார்கள், பக்தர்கள்?”

“இந்த நேரத்தில், அதைப்பற்றியெல்லாம் கேட்கமாட்டார்களே, சுயமரியாதைக்காரர்கள். மகேசனை விட, மக்கள்தானே தங்களுக்கு முக்கியம் என்று சொல்லிவருகிறார்கள்......”

“அப்படியானால், அவர்களைத்தானே, பார்வதி, உண்மையான பக்தர்கள் என்று சொல்ல வேண்டும்”

“ஆமாம், நாதா, அதுதான் சரியெனப்படுகிறது எனக்கும்.....”

★

# இரத்தமும் கண்ணீரும்!

**“எத்திப் பிழைக்காதீர்! எங்கள் வயிற்றிலடிக்காதீர்! பொதுமக்களுக்குச் சேவை செய்வதாகச் சொல்லிக்கொண்டு எங்கள் புத்தகங்களைப் போட்டு பணம் சம்பாதிக்கிறீர்களே—கேட்டால், ‘பொது மக்கள்’ நன்மைக்காக என்று சாக்குச் சொல்லுகிறீர்களே!-அச்சடித்துக் கொடுப்பவன் இனாமாகவா அச்சடித்துக் கொடுக்கிறான். அப்படி இருக்கும்போது, ஆசிரியனுக்கு ஏதோ கொஞ்சம் கொடுப்பதில் என்ன கெட்டுவிடப் போகிறது?”** என்று பிரசுரகர்த்தர்களுக்குப் புத்திமதி கூறவந்த நேருபண்டிதர், அருமையான ஒரு வார்த்தையைச் சொல்லியிருக்கிறார். அதுதான், **இரத்தமும் கண்ணீரும்!**

அவரும் ஒரு எழுத்தாளனாகயிருந்து, எண்ணங்களை முடைவதிலும், அவைகளை எழுத்தாக்க எண்ணற்ற இரவுகளை ஓட்ட வேண்டுவதிலும் உண்டாகும் சங்கடங்களையும் அறிந்தவரல்லவா? அதனால், டிசம்பர் 7-ந்தேதி புதுடில்லியில் நடைபெற்ற பிரசுரகர்த்தர்கள்—விற்பனையாளர்கள் சங்க ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு பேசியபோது இவ்வண்ணம் அறிவித்திருக்கிறார்.

ஏடு தீட்டுபவன், எதைக் கொண்டு எழுதுகிறான்? இங்கியும் பேனாவும் கொண்டா! அப்படித்தான் எண்ணுகிறார்கள், ‘செக்’ புத்தகத்தில் கையெழுத்திடும் சீமான்கள். ஆனால் பண்டிதநேரு தெரிவிக்கிறார், ஆசிரியர்கள் **இரத்தத்தையும்கண்ணீரையும்** கொண்டு எழுதுகிறார்களாம்! அப்படிப்பட்டவர்களை வஞ்சிக்காதே — பிறருக்கு உல்லாசமும் உணர்ச்சியும் உண்டாக்கும் அவர்களை, உன்னிடம் ஓடி ஓடி அலையும்படி ஏற்படுத்தாதே — ஏமாற்றிப் பிழைக்க நினையாதே—நியாயமாக நட—அவர்களுக்கும் ஏதோ கொஞ்சம் கொடு —ஏனெனில் அவர்கள், இரத்தத்தையும் கண்ணீரையும் கலந்து எழுதுபவர்கள், தெரியுமா? அதை மறந்துவிடாதே! — என்று, எடுத்துரைத்துள்ளார்.

எழுத்தாளரின் நிலைமையை விளக்கியதோடு அன்றி, பிரசுரகர்த்தர்களுக்கும் யோசனைகள் கூறியிருக்கிறார் — மனிதர்களுக்கு நோய்நொடி வந்துவிட்டால் எப்படி அவைகளைக் கண்டுபிடித்து வைத்யம் செய்ய இங்கெல்லாம் ‘ஆஸ்பத்திரி’கள் இருக்கின்றனவோ, அதுபோல அமெரிக்காவில் ஒவ்வொரு பிரசுரகர்த்தரும், “புத்தக ஆஸ்பத்திரிகள்” வைத்திருக்கிறார்களாம்! எந்த நூலாவது, நன்றாக விற்காமல் தேங்கிக் கிடக்கிறதென்றால் அதற்கென்ன காரணம், ஏன் விற்கவில்லை, அதிலுள்ள விஷயம் மக்களுக்குப் பிடிக்கவில்லையா, விலை அதிகம் என்று கருதுகிறார்களா, கவர்ச்சியான முறையில் நூல் அமையவில்லையா இதில் எந்த ‘நோய்க்கு’ அந்த நூல் ஆளாகியிருக்கிறது என்று கண்டறிந்து தக்க சிகிச்சையும் செய்து அந்த நூலை விலைபோகச் செய்கிறார்களாம். அதற்கு ஒருஎடுத்துக்காட்டுகூடச் சொல்லியிருக்கிறார், நேரு பண்டிதர்! “பெரிய தத்துவ ஞானியான பிளேடோ எழுதிய “ரிபப்ளிக்” எனும் நூல் வெளியாகி பல நாட்களாகியும் விற்பனையாகவில்லையாம். அதைக் கண்ட பிரசுரகர்த்தர்கள், ‘புத்தக ஆஸ்பத்திரி’க்கு அனுப்ப, அங்குள்ள ‘டாக்டர்கள்’ காரணம் தெரிந்து சொன்னார்களாம். அதன்படி, நூலின் பெயரைக் கவர்ச்சிகரமாக மாற்றி வெளியிட்டதும் ஒரு லட்சம் பிரதிகள், பறந்துவிட்டதாம். அதுபோல, ஒரு நூல் விலையாகவில்லை என்றால், நமது நாட்டுப் பிரசுரகர்த்தர்கள் மனமொடிந்துபோகாமல், காரணத்தைக் கண்டறிந்து அதனைக் களைய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் — பிரசுரகர்த்தர்—ஆகியோர்களைப்பற்றிப் பேசிய பிரதமர், விற்பனையாளர்களை மறந்துவிடுவாரா? அதனால் அவர்களுக்கும் ஒரு அறிவுரை தந்துள்ளார்—நூல் நிலையங்கள் ‘ஆர்டர்’ அனுப்பினால், கவனித்து ‘பில்’ போடுங்கள்; கமிஷன் தருவதில் எல்லாம் கொஞ்சம் தாராளமாக

இருங்கள்; அதை விட்டுவிட்டு 'கெடுபிடி' காட்டினால் எப்படி உங்களிடம் வரும் ஆசை அவர்களுக்கு உண்டாகும்? சரிதான், போ! என்று அவர்களுக்கும் சலிப்பேற்பட்டுவிடுகிறது —என்பதாக, அவர்களுக்கும் யோசனை கூறியுள்ளார்.

ஆண்டு விழாவுக்கு வந்த அனைவருக்கும் யோசனைகள்; அதுவும், அவசியம் தேவையான யோசனைகள்! என்ன இருந்தாலும், மக்களின் தலைவரல்லவா, அதனால் மக்கள் மன்றத்திலுள்ள ஒவ்வொரு சார்பினரின் வாழ்க்கைக் குறைகளையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிந்து, அதற்குரிய பரிகாரங்களையும் தெரிவித்திருக்கிறார். ஆண்டு விழாவுக்கு வந்திருந்த பிரசுரகர்த்தர்களும் சரி, விற்பனையாளர்களும் சரி, நேருவின் பிரசங்கத்தை எங்காவது ஒரு ஒடிந்துபோன நாற்காலியில் — கிழிந்துபோன உடைகளுடன்—உள்ளம் உடைந்துபோன மனைவி மக்களுடன் உட்கார்ந்து கொண்டிருக்கும் 'சிந்தனைச் சிற்பி'கள் படிக்கும்போதும் சரி, மகிழ்ச்சி அடையவே செய்வர்.

அதற்காக நேரு பண்டிதருக்கு—அவரும் ஒரு ஆசிரியர் என்பதற்காக, நமது நன்றி. வணக்கம்.

ஆனால், ஒவ்வொருவருக்கும் அவர்தம் கடமைகளை எடுத்துரைத்த கண்ணியமுள்ள சிந்தனைச் சிற்பியாம் நேரு பண்டிதர், வெள்ளைக்காரன் காலமாயிருந்தால் அவனுக்கும் சேர்த்து அறிவுரை தந்திருப்பார் ஆனால், ஆள்வது தான் என்பதால், சர்க்காருக்குத் தரவேண்டிய அறிவுரையை அவர் கூற விரும்பவில்லை என்று கருதுகிறோம்.

*

**இரத்தமும், கண்ணீரும் கலந்து ஏடு** தீட்டுகிறான், ஆசிரியன்.

தூங்காமல் கழித்த இரவுகளும், சிந்தனையால் மூளையைக் குழப்பிக் கொண்டு அவதிப்படும் மணித்துளிகளும் ஏராளம்.

அவனுக்கும் வயிறு இருக்கிறது! நேருவே, அதனை எடுத்துரைக்கிறார்.

கீர்த்திக்காக மட்டுமல்ல, ஆசிரியன் இரத்தத்தையும் கண்ணீரையும் சிந்தி, அரிய நூல்களை ஆக்குவது. மனைவி—மக்கள்—தாய்—தந்தை—நல்லது — கெட்டது— இத்தனைக்கும் தேவையான 'பணம்' வேண்டும் அவனுக்கு! அதற்காகத்தான் அவன் ஓடுகிறான்—தேடுகிறான்— ஆடுகிறான்—பாடுகிறான்— பல்லிளிக்கிறான்— எல்லாம் செய்கிறான்.

ஆனால், அத்தகைய ஆசிரியனின் குடும்பத்தை, நிமிடநேரத்தில் திண்டாட விட்டுவிடுகிறதே, அரசு, சிறு உத்திரவுமூலம். இதற்கென்ன சொல்லுவார், நேருபண்டிதர்.

**124-A—தடை—படிக்காதே—பறிமுதல் செய்—வழக்குப் போடு! தண்டனை கொடு—** என்று, தாம் தூம் என்று, அல்லாட வைக்கிறதே. அப்படி, சுயராஜ்ய ஆட்சியில், அவதிக்கு ஆளாகிப்போன ஆசிரியர்கள் எத்தனை பேர் வேண்டும்? நமது இயக்கத்து எழுத்தாளர்களையும் என்னென்ன பாடுபடுத்தினார்கள்! முற்போக்குவாதிகளாயிருப்போர், பிறமாகாணங்களிலும்தான், என்னென்ன அல்லலுக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

ஆசைத்தம்பியை மொட்டையடித்தார்கள்—அந்நூலைப் பிரசுரம் செய்தவர்களையும் அச்சடித்தவர்களையும் அலைக்கழித்தார்கள்; தங்கப்பழத்துக்கும் அதே கதி; கருணாநிதியின் நாடகத்துக்குத் தடை; பாரதிதாசனது நூலைச் சட்ட விரோதம் ஆக்கினர்; பெரியாரையும் அண்ணாதுரையையும் இழுத்துக்கொண்டு போய் பூட்டினர்— இதெல்லாம், சரியா. என்ன பதில் சொல்லமுடியும்? அவரது, பேச்சுப்படி, இரத்தமும் கண்ணீரும் கலந்து எழுதுபவர்கள் தானே இவர்கள்.

“இதெல்லாம், இப்போதா நடந்தது? போன தேர்தலுக்கு முன்புதானே! இப்போதுதான் எங்களுக்குப் புத்தி வந்துவிட்டதே—அப்படியெல்லாம் செய்வதில்லையே” என்று சொல்லக் கூடும். ஆனால், அதைவிடக் கொடுமையன்றோ நடைபெற்று வருகிறது. இரத்தமும் கண்ணீரும் சிந்தும் எழுத்தாளனின் ஏடுகளைத் தூக்கி அல்லவோ, எரிகிறார்கள்—சர்க்காரின் சலுகை பெறும் நூல் நிலையங்களும், படிப்பகங்களும். வெள்ளைக்காரன் காலத்தில், பஞ்சாப் சிங்கம் பகவத்சிங் தன்னுடைய கடைசி காலத்தில் எழுதிய ஏட்டின் பிரதி எந்த நூல் நிலையத்திலும் இருக்கக் கூடாது என்றார்கள். நேரு பண்டிதர் போன்றோரின் நூல்கள் கூட, பல சர்க்கார் வாசகசாலைக்குள் தடுக்கப்பட்டன. அதேபோல, இவர்களாட்சியில், கம்யூனிஸ்டு எழுத்தாளர்கள் ஏடுகளும், நம்மவர்கள் தீட்டும் நூல்களும், 'பகிஷ்காரம்' செய்யப்படுகின்றனவே, அதிகாரிகளால்.

**துவேஷ விஷயங்கள் உள்ளனவாம்!—** கேட்டால் ஒரே பதில், அளிக்கப்பட்டுவிடுகிறது. அந்தத் துவேஷ விஷயங்களையும்தான் மக்கள் படிக்கட்டும் — தூய்மையாளர்கள் எழுதியவைகளையும் படிக்கட்டும்—ஜனநாயக நாடல்லவா, இது? —எந்தக் கருத்து சரியெனப் படுகிறதோ, அதைச் சீர்தூக்கிப் பார்த்து மக்கள் முடிவு செய்து கொள்ளட்டும், என்று எங்கே கருதுகிறார்கள். எதிர்க்கட்சி எழுத்தாளனின் இரத்தத்துக்கும் கண்ணீருக்கும் எங்கே மதிப்பளிக்கப்படுகிறது? நூலறிவு பெருக வேண்டியதன் அவசியம் பற்றியும், அந்த முயற்சியில் 'இரத்தமும் கண்ணீரும்' கலந்து எழுதும் எழுத்தாளர்களுக்கு உரிய ஊதியம் அளிக்க வேண்டுவது குறித்தும், பிரசுரகர்த்தர்களும் விற்பனையாளர்களும் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும், மிகவும் அருமையாக எடுத்துரைத்துள்ளார், நேரு! ஆனால் நீதி வழங்கவேண்டிய அரசே, அலட்சியப்படுத்துகிறதே, மாற்றுக்கட்சி எழுத்தாளர்களை!! அதற்கு என்ன பதில் சொல்லுவார், நேரு? தெரியாதவரா, இந்த விபரங்களை! இருந்தும் ஏன், இவர்களின் இரத்தத்தையும் கண்ணீரையும் மதிக்கவில்லை, காங்கிரசாட்சி? சரியா, தகுமா, என்று அவரையும் அவர்தம் சீடர்களையும் கேட்கிறோம். மனித உடல்களில் எல்லாம் ஒரே இரத்தம்தான் ஓடுகிறது! ஒரே விதமான கண்ணீர் தான் வழிகிறது! — இரத்தத்துக்கும் கண்ணீருக்கும் அனுதாபம் காட்டும் நேரு பண்டிதர் எதிர்க்கட்சியினரின் இரத்தத்துக்கும், கண்ணீருக்கும் ஏன் மதிப்பளிக்க மறுக்கிறார்—மாற்றார், என்பதாலா! ஆம்எனில்அக்கிரமம்தானே அது!

★

## வருந்துகிறோம்

தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்தவரான காஞ்சீபுரம் T. பரமசிவனார் அவர்கள், தமது 76வது வயதில் 10-12-55 இரவு இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து வருந்துகிறோம் துயரால் வாடும் அவரது குமாரர்களுக்கும், குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்கள்,

# அட்லி விலகினார்

இருபது ஆண்டுகள்! — ஜனநாயகத்தின் பொருளுணர்ந்த மக்கள் வாழும் நாட்டில், ஒரு அரசியல்கட்சியின் தலைவராகத் தொடர்ந்து விளங்குவது, எளிதான செயலல்ல. ஒருவர் இருவராகிவிட்டாலே, கருத்தலைகள் மோதுகின்றன— கணவனும் மனைவியுமாகயிருப்போரிடையில்கூடக் கருத்து வேற்றுமைகள் இல்லாமலில்லை. அப்படியிருக்கும்போது, பல்லாயிரக் கணக்கான மக்கள் சேரும், கட்சியிலே எத்தனையோ எண்ணங்கள், மின்னக்கூடும். சில வேளைகளில் இடியும், புயலும்கூட ஏற்படநேரும். சினமெனும் சூறாவளி, சுற்றி அடிக்கும்! மாறுபட்டோரின் மன ஆவேசம் தாக்கும்! எனினும், அதே மக்கள், அன்புமாரியைச் சொரியும்பொழுது எவ்வளவு அகமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுகிறோமோ அதேபோல இந்த 'இடி'களையும் சமாளித்து, ஏசியோரையும் புன் சிரிப்பால் மயக்கி, 'இடி'களை வீசியோரிடமும் தோழமை பூண்டு, கட்சியைக்கொண்டு செல்லுவது என்பது — அதுவும் இருபது ஆண்டுகள்!—இலேசான காரியமல்ல.

இந்திய உபகண்டத்தில் வேண்டுமானால் ஒரு தடவை பீடம் ஏறிவிட்டவர்கள் என்றும் பீடதாரிகளாகவே அமரும் வாய்ப்பு இருக்கிறது! கட்சிகளிலும் சரி, அரசிலும் சரி, எடுபிடிகளை ஏற்படுத்தியோ, ஏனையோரைச் சரிப்படுத்தியோ, எத்தனை குற்றங் குறைகளிருந்தாலும் 'சிரஞ்சீவித்' தலைவராக மிளிர வாய்ப்புண்டு. ஒருமுறை மடாதிபதியானவர், எப்படிச் சாகுமளவுக்குச் சச்சிதானந்தச் சின்னமாய், மதத்துறையில் உலவ முடிகிறதோ அதுபோல் அரசியல் துறையிலும் 'அதிபதி'களிருப்பதை அனுமதிக்கும் நாடு, இது. இங்கிலாந்து அப்படிப்பட்டதல்ல! "எனக்கு ஜனநாயகத்தில் இம்மியளவும் நம்பிக்கை கிடையாது" என உலகமே போற்றும் சர்ச்சில் சொன்னாலும்கூட, அங்குள்ள மக்கள் ஏற்கமாட்டார்கள் — "அப்படியா? அவ்வளவு தைரியம் வந்துவிட்டதா!"—என்று சொல்லாமற்சொல்லிவிடுவார்கள், அரசியலிலிருந்து அவரை விரட்டுவதன் மூலம். அப்படிப்பட்ட இங்கிலாந்தில், இருபதாண்டுகள் தொழிற்கட்சியின் தலைவராகத் தொடர்ந்து விளங்கியவர் தோழர் அட்லி! அப்பேற்பட்டவர், கடந்த 8-ந் தேதி, தானாகவே தன்னுடைய தலைமைப் பதவியை விட்டு விலகி, அரசியலிலிருந்து ஓய்வெடுத்துக்கொண்டிருக்கிறார்.

கன்சர்வேடிவ் கட்சியின் ஏக தலைவராக இருந்து அண்மையில் ஓய்வெடுத்துக்கொண்டார் சர்ச்சில்.



அவருக்காவது, பிறரை மயக்க வைக்கும் ஆற்றலுண்டு. சிறந்த பேனா வோட்டி! அருமையான பிரசங்கி!—அவர் கூறும் கருத்துக்களும், தீட்டும் எழுத்துக்களும், அவருக்கொரு தனிச் செல்வாக்கை உண்டுபண்ணி இருக்கின்றன, உலகில். அட்லி, அப்படிப்பட்ட தனித் திறமை எதுவும், அற்றவர்! சொற்பொழிவாற்றும்,திறனற்றவர் —வீரமுழக்கம், செய்யஇயலாது அவரால்—எனினும் இருபது ஆண்டுகள், தொழிற்கட்சியின் தலைவராக விளங்கியிருக்கிறார்! எப்படி முடிந்தது, அவரால்? — தொண்டாற்றும் தூய்மை உள்ளத்தால்!

அட்லி, ஏழைகளுக்கும் மத்யதர மக்களுக்கும் பாடுபடும் தொழிற்கட்சியின் தூணாக இருந்தார்.

ஆனால், அவர் பிறந்த இடமும், வளர்ந்த சூழ்நிலையும் ஏழ்மையானதல்ல! இலண்டன் மாநகரிருந்த வக்கீலொருவரின் ஏழு மக்களில், ஒருவர், அட்லி. செல்வாக்கும், சிங்கார வாழ்வில் திளைக்கும் வசதியும் கொண்ட குடும்பம்தான். கவலையின் ரேகைகள் அவருடைய கன்னங்களில் படியும் வாய்ப்பு இல்லை! பசியும் பட்டினியும், வெகுதூரம். குடிசைபுரியின் அனுபவங்களைப் பெற்றவருமல்ல! எனினும், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் படித்து பட்டம் பெற்றதும், உத்யோக வேட்டையாடச் செல்லவில்லை அவர்மனம்.

உலகமே புகழும் தேம்ஸ் நதிக்கரையின் சிங்காரத் திருஇடமாம் இலண்டன் மாநகரின் ஒதுக்குப் புறங்களிலேயிருந்த சேரிகளை நோக்கிச் சென்றார். சீமான்களின் திருநகரம், அது —என்றாலும், அதன் ஒருபக்கத்தில், நாகரீக உலகையே கேலி செய்வதுபோல் சேரிகள். அங்கே, சிதைந்த சித்திரங்களாய் நலியும் வாழ முடியாதவர்கள். அவர்களை நோக்கிச் சென்றார். அவர் கண்ட காட்சிகள், அவர்மனதில், புயலை எழுப்பின. ஆண்டவன் விட்டவிதி! கர்த்தரின் கட்டளை! நமக்கென்ன? நம்மாலே, ஆகுமா! வீண்வேலை!— என்று அட்லியின் உள்ளம் எண்ணவில்லை. அவர்மனதில், புயலடிக்க ஆரம்பித்தது! கல்லூரியில் கற்றபாடங்கள் கவனத்துக்குவந்தன. ஏன்? இப்படி அவர்கள் அல்லாட வேண்டும்?—என்று நினைக்க ஆரம்பித்தார். கல்லூரிப் படிப்புப் பெற்றவன் மனதில், 'ஏன்' எனும் கேள்விகள் முளைத்துவிட்டாலே போதுமே!

கல்லூரிகளில் கற்றதெல்லாம் மனதில் உரைக்கத்தானே செய்யும். அதனால், ஏழைகளின் துயரைத் துடைக்கத் தன்னாலான உதவிகளைச் செய்யவேண்டுமெனும் உறுதி பூண்டார்! அதற்குள்ள ஒரே வழி, சமதர்மப்பாதை புகுவதுதான் என்றும் முடிவுக்குவந்தார்.

முதலாம் உலகப்போரின்போது 'மேஜராக'ப் பதவியேற்று மெசபடோமியச் சமவெளியில் குண்டடியும் பட்டார், அட்லி. 1922-ல் பிரிட்டிஷ் மக்கள் சபையின் உறுப்பினரானார். 1935-ல், தொழிற் கட்சியின்

தலைவராக, ஆனார். சில ஆண்டுகள் வரையில் அட்லியைப்பற்றி அதிகம் அறியார், அரசியல்வாதிகள். அந்தக் காலத்தில் தன்னுடைய ஆர்வத்தால், சொந்தக் கட்சியினரிடையில் மகத்தான செல்வாக்கைத் திரட்டிக்கொண்டிருந்தார். பிறகு 1940-ல் இரண்டாவது உலகப்போர் துவங்கியதும், பிரிட்டனில், கூட்டாட்சி ஏற்பட்டது. சர்ச்சில், பிரதமர்! அட்லி, துணைப் பிரதமர்—நாட்டிற்கு வந்த பொதுக்கேட்டை எதிர்க்க, இரு துருவங்களும் இணைந்தன.

போர் முடிந்து வெற்றிக் கதிரவன் மலர ஆரம்பித்ததும், நடைபெற்ற பொதுத்தேர்தலில் அட்லியின் கட்சி வெற்றிபெற்றது. பிரதமரானார், அட்லி. அவருடைய ஆட்சியில்தான், அடிமைப்பட்டுத் தவித்துக் கிடந்த இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பர்மா முதலிய நாடுகளுக்கு அதிகாரமாற்றம் செய்தார். சர்ச்சிலும் அவரது பரம்பரையினரும் அடைய இயலாதஅருமையான இடத்தை, இந்த நற்செயல் மூலம் அட்லி பெற்றார்.

உள்நாட்டிலும், பிரபுக்குலத்தின் ஓங்காரக் கூச்சலைப் பொருட்படுத்தாது, இங்கிலாந்து பாங்கியைத்தேசியமயமாக்கினர்—நிலக்கரி, மின்சாரம்—வாயு உற்பத்தி—விமானப் போக்குவரத்து—பஸ் போக்குவரத்து முதலிய பல துறைகளையும் சர்க்காரே ஏற்று நடத்தும் சட்டங்களைச் செய்தார்.

ஏழைகளின் துயரங்களை நன்ருக அறிந்தவராதலால் அட்லி, சட்ட மூலம் பல நன்மைகளைச் செய்யலானர். சமதர்மப்பாதை அமைப்பதென்ருல், சீமான்களையும் பூமான்களையும் சாய்க்க வேண்டுமெனும் 'பலாத்கார' வழியைவிட, அமைதியான முறையில் அந்தக் காரியங்களைச் செய்யமுடியும் என்று கருதுபவர், அவர். அதனுல்தான், பிரிட்டனிலுள்ள கம்யூனிஸ்டுக் கட்சி, தேர்தலில், ஒருவரைக்கூடத்தேர்ந்தெடுத்துப் பார்லிமெண்டுக்கு அனுப்ப முடிவதில்லை.

பதவிக் காலம் முடிந்தபின் நடைபெற்ற தேர்தலில் சர்ச்சிலின் கட்சியே பதவிக்கு வந்தது, என்ருலும் எதிர்க்கட்சியின் தலைவர் என்ற முறையில் 'வெறுக்கப்படும்' செஞ்சீனவுக்குச் சென்று வந்தார். உலக நிலையை கண்கூடாக அறியும் வல்லமை பெற்றவராதலால் மேற்கத்தி நாடுகள் கம்யூனிசக் கொள்கையை, எதிர்த்துக் கொண்டே இருப்பதால் எந்தவித நன்மையும் பெற்றுவிட முடியாது என்பது அவர் எண்ணம் 1953ல் அவர், இந்தியா, பாகிஸ்தான், பர்மா ஆகிய நாடுகளுக்கெல்லாம் வந்து சென்ருர்.

இருபது ஆண்டுகள், பொது வாழ்க்கையிலிருந்தும், மாற்ருரும் பாராட்டுமளவுக்கு அவர் பெயர் பெறக் காரணம், எதனையும் மக்களுடைய பிரச்னையாக அவர் கருதியதுதான்! உள்நாடாயினும், வெளிநாடுகளாயினும் அவர் ஆங்காங்குள்ள மக்களின் நாடியை அறிந்து அதன்படி அவர்களுக்கு வாழ்வு அளிக்கவே முயற்சி செய்தார். இந்த நற்பண்புதான், கட்சிக்குள்ளும் இருபதாண்டுகள் தொடர்ந்து பதவிவகிக்குமாறு செய்தது. கட்சிக்குள்ளிருந்தோர், அவருடைய தூய்மையான தொண்டுள்ளம் கண்டு பாராட்டி வந்தனர்!

**"எனக்கு வயதாகிவிட்டது என்னை விட, வயதில் இளைஞர்களே பொறுப்பேற்று காரியங்களைச் செய்யவேண்டும். அதற்கு இடமளிக்கவே நான் விலகிக் கொள்ளுகிறேன்,"** என்று தெரிவித்துவிட்டு, அரசியலிலிருந்து விடைபெற்றுக் கொண்டிருக்கிருர். பிரிட்டிஷ் அரசியாரும், அவருடைய பொதுச் சேவையின் சிறப்பினையுணர்ந்து பிரபுக்களில் ஒருவராக சகலராஜ மரியாதைகளையும் அடையும் பெருமையை அளித்துள்ளார்.

ஆட்சிப் பொறுப்பை இளைஞர்கள் வசம் விடவேண்டுமெனும் அவருடைய முடிவு, விவேகமானது என்று எல்லோரும் பாராட்டுகிருர்கள். பிரிட்டிஷ் அரசியலில், தூய்மையான தொண்டால் தலைவராக விளங்கிய அவருடைய வாழ்க்கை அரசியல்வாதிகளின் பாராட்டைப் பெறக்கூடியதாகும்.

ஏழையும், பணக்காரனும் இருந்தாலும் அவர்களுக்கிடையே இருக்கும் பேதாபேதங்களை, ஜனநாயக முறையில் தீர்க்கவேண்டும் என்று பாடுபட்டவர், அவர். அட்லியின் வாழ்க்கை, நல்லதோர் அகராதி தான்.

★

# ★ இந்தி! இந்தி!! ★

"தமிழ்! தமிழ்!! என நீ முழங்கு" என்று அமைச்சர் சுப்ரமணியம் அனுதினமும் பேசுகிருர்,

"தீது! தீது!" என்று செப்புகிருர், இந்தி குறித்து, சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்.

"அவசரம், அல்லலைத் தரும்" என்று எச்சரிக்கிருர்; அண்ணமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்.

ஏடுகள், அறிஞர்கள், எவரெவர் நாம் இந்தி எதிர்ப்பு நடத்தியபோது ஏசினரோ, அவர்களெல்லாம் தீவிரமாக முன்வந்து பேசுகின்றனர்.

இந்தி! இந்தி!—எனும், பயம், எங்கும் பரவிவருகிறது. அதிலும் நேரு பண்டிதரின் அரசு, செய்கிற காரியங்கள் அனைத்திலும், இந்தியைத் திணிக்கும் அவசரம் தென்படுகிறது.

மத்திய சர்க்காரின் உத்யோகங்களுக்கு இந்தியில்தான் பரீட்சை நடத்தப்படும்—என்ருர்கள். எங்கும் எதிர்ப்பு, எனவே, அதனை ஒத்திவைத்திருப்பதாகச் சொன்னுர்கள்.

அந்தவிஷயம் இன்னும் உலர்ந்து போய்விடவில்லை, அதற்குள் இரு வாரங்களுக்கு முன்பு இன்னெரு உத்திரவு புறப்பட்டிருப்பதாக ஏடுகள் கூறுகின்றன.

இரயில்வே நிலையங்களில், "உள்ளே வர" "வெளியே செல்ல" என்றும், இன்னும் இதுபோலவும் அறிவிப்புப் பலகைகள் இருக்கின்றனவல்லவா, அவைகளையெல்லாம் இந்தியில் எழுதப்போகிருர்களாம்! மக்களிடம் படிப்படியாக இந்தியின் அறிவை விசாலமாக்கப்போகிருர்களாம்.

நாளொன்றுக்கு இந்திய ரயில்வே மூலமாக 35-லட்சம் பிரயாணிகள் போக்குவரத்து செய்கிருர்களாம். அவர்கள் மனமும், கண்ணும் இந்தி எழுத்துக்களின்மீது பதிந்து அதன் மூலம் இந்தி அறிவு பரவுமாம்.

இயலுமோ, இயலாதோ—அது வேறு விஷயம். அந்த உத்திரவில் தொனிக்கும் அவசரத்தையும் ஆவலையுமே குறிப்பிடுகிறோம்.

சில நாட்களுக்கு முன்பு, ரஷ்யத் தலைவர்களுக்கு இந்தியிலேயே வரவேற்புகள் அளிக்கவேண்டுமென்று சென்னை சர்க்காருக்கு தாக்கீதுவந்தது. சென்னைமாநகர

மன்றமும், கோவை நகராட்சி மன்றத்தினரும், 'சீ!' என்று அந்த உத்தரவை, வீசியெறிந்தனர், அந்த தாக்கீதின் விளைவாக, இத்துணை நாளும் இல்லாத தமிழன்பும் பிறந்தது, சென்னை நகரமன்றத்துக்கு. வரவேற்பில் தூய தமிழ் துள்ளி விளையாடிற்று.

கோவையில், புல்கானின், மக்களைப் பார்த்துச் சொன்னாராம், "இந்தோ — ரஷ்யோ, பாய்பாய்" என்று. கோரைப்பாயா, ஈச்சம்பாயா எதைப்பற்றிச் சொல்கிறார் என்று விழித்தவர்களாய், மக்கள் பேசாதிருந்திருக்கிறார்கள். அருகேயிருந்தவர்கள், "அப்படிச் சொன்னால், புரியாது, சகோதரர்களே, என்று அழையுங்கள்" என்று தெரிவித்திருக்கிறார்கள். "இந்தோ—ரஷ்ய சகோதரா" என்று சொல்லியிருக்கிறார், புல்கானின். தமிழில் வழங்கி வரும், அச்சொல்லைக் கேட்டதும், ஆரவாரம் செய்து கைதட்டியிருக்கிறார்கள், மக்கள்.

**இந்தி ஆதிபத்யம் ஒழிக!**

**இந்தி, எத்துறைக்கும், இலாயக்கற்ற மொழி.**

**தமிழருக்கு, இந்தியாவுக்குள் தொடர்புகொள்ள இந்தியும், உலகுடன் தொடர்புகொள்ள ஆங்கிலமும் ஆக இரு மொழிகள் ஏன்? ஆங்கிலமே போதாதா?**

**உலக மொழியாம் ஆங்கிலத்தின் இடத்தை எட்டிப் பிடிக்க முடியுமா, இந்தியால்? சாத்யமாகுமா!**

இதுபோல, எங்கும்—எல்லாத் துறைகளிலிருந்தும், எதிர்ப்பு கிளம்பிக்கொண்டிருக்கிறது.

அந்த எதிர்ப்பின் அளவையும் வலிவையும் உணர்ந்துகொண்டவர் போலவே, ஒவ்வொரு முறையும் நேரு பண்டிதர் பேசுகிறார் — அண்மையில் ஐதராபாத்துக்கு வந்தபோது, "இந்தி, பெரிய மொழியென்பதற்காக அதைக் கட்டாயமாக்க வேண்டும் என்று சொல்லவில்லை! ஆனால் இந்தியாவிலிருக்கும் மொழிகளில் அதிகம்பேர் பேசுகிற மொழி என்பதாலேயே அதை வலியுறுத்துகிறோம்" என்று விளக்கமளிக்கிறார்.

இந்தி சாதாரண மொழி என்பதை நேருபண்டிதர் தான் சொல்ல வேண்டுமென்பதில்லை! வரலாறு கூறும். **அதிகம்பேர் பேசுகிறார்களாம்!**— அதிகம் பேரைச் சந்தித்துப் பேசக்கூடிய **நிலையிலா**, இருக்கிறான், கோடியக் கரையிலும் குமரி முனையிலும் கிடக்கிற குடிமகன். அவனால் சென்னைக்குக்கூட வந்து செல்ல முடிவதில்லையே! இந்த நிலையில் அவனுக்கேன் வடநாட்டு மொழி?

இதே கேள்வியைத்தான் வங்காளத்திலும், பஞ்சாபிலும் கேட்கிறார்கள்.

**எதற்காகய்யா, இந்தி மொழி?**

**இந்தியில் காரியங்கள் நடைபெற்றால் தான், இந்தியாவுக்கு வந்த சுதந்திரம் நிலைக்கும் என்று பொருளா?**

**தேசியப் போராட்டத்தின்போது, வெள்ளையனின் அக்ரமத்தைக் குறிப்பிட இது மிகவும் பயன்பட்டது. அதனையே தொடர்ந்து கடைபிடிப்பதும் ஆகுமா.**

எதற்காக, இந்தி? ஏன், இந்தி?— விளக்கம் சரியாகக் கிடைப்பதில்லை.

என்றாலும், டில்லியினர் தொடர்ந்து இந்தி திணிப்பதற்கான ஏற்பாடுகளை செய்தவண்ணமுள்ளனர்.

இராணுவத் துறையில், இந்தி, எல்லா இடங்களிலும் புகுந்து வருவதாகக் குறைபட்டு எழுதுகிறார்கள் பலர்.

டிசம்பர் 5ந் தேதி புது டில்லியிலிருந்து வரும் அதிகார பூர்வமான செய்தி கூறுகிறது,

**77 வார்த்தைகள் முடிவு செய்யப்பட்டுள்ளனவாம் — உடனடியாக இராணுவப் பயிற்சியின்போது உபயோகம் செய்ய.**

**இதுபற்றி நியமனம் செய்யப்பட்ட நிபுணர் குழு 1100 வார்த்தைகளை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளனராம். இந்த வார்த்தைகளைப் பரிசீலனை செய்ததும் மேலும் பல வார்த்தைகள் புகுத்தப் படுமாம்.**

ஆயிரத்து நூறு சொற்கள்! அலட்சியம் செய்வதற்கான விஷயமா, இது. ஆங்கிலத்துக்குப் பதில் இந்தி இடம்பெறுகிறது! இந்தியப் படையில், ஏராளமான தென்னாட்டு மக்கள் வீரர்களாகவும் அதிகாரிகளாகவும் இருந்து வருகிறார்கள்.

டிசம்பர் 6-ந் தேதி புது டில்லியிலிருந்து இன்னொரு சேதி வந்துள்ளது.

**மொழிவாரி மாகாணப் பிரிவினை குறித்து பசல் அலிகுழு ஒரு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்களல்லவா? ஆங்கிலத்திலுள்ள அந்த அறிக்கை விரைவில், இந்தியில் மொழி பெயர்த்து வெளியிடப் படுமாம்!**

அவசியம் என்ன—அதற்காகச் செலவாகும் பணம் யார் வீட்டுச் சொத்து—என்பது ஒருபுறமிருக்க அதில் தொனிக்கும் ஆர்வத்தையும் ஆசையையுமே குறிப்பிட விரும்புகிறோம்.

இப்போது டிசம்பர் 12ந் தேதி புதியதோர் உத்தரவு பிறந்திருக்கிறது.

**பொதுமக்களுடன் கடிதப் போக்குவரத்து**
**நிர்வாக அறிக்கைகள்**
**பார்லிமெண்டு அறிக்கைகள்**
**சர்க்கார் தீர்மானங்கள்**
**சட்டங்கள்**
**ஒப்பந்தங்கள்**
**வெளி நாடுகள் உறவு**

முதலியவைகளுக்கு இந்தியை உபயோகிக்குமாறு, உத்தரவு பிறப்பித்துள்ளார், குடியரசுத் தலைவர்.

உள் நாடு! வெளிநாடு! கடிதப் போக்குவரத்துகள்—நிர்வாக அறிக்கைகள் எல்லாம் இந்தியிலாம்.

இந்த இலாகாக்களில் பணியாற்றும் இந்தி தெரியாதவர்கள் நிலை என்ன? ஏதாவது, ஒரு அறிக்கை வந்தால் விழிக்கவேண்டும்! அப்படி விழிப்போர், வீட்டுக்கு வரவேண்டும்! அதுதானே நடக்க முடியும்.

இதுபோன்ற அவசரச் செயல்களை, தென்னாட்டினராகிய நாம் மட்டுமல்ல; வடக்கிலுள்ளோரும் கண்டிக்காமலில்லை.

பம்பாய் வர்த்தக சபை, இது குறித்து எச்சரித்திருக்கிறது. அவசரப்பட்டு நாட்டின் முக்கிய துறைகளில் எல்லாம் இந்தியை நுழைப்பதால் நன்மைகள் உண்டாகாது; சிக்கல்கள் பெருகும் என்று தெரிவித்திருக்கிறது.

கார்டில் இந்தி, காசில் இந்தி, பெயர்கள் இந்தியில்! பெரிய காரியங்களெல்லாம் இந்தியில்—என்று இப்படியே "ஜைசாக" எல்லாம் நடந்துகொண்டிருக்குமானால், நாளைய தினம் நம்முடைய நிலை என்னாகும்?

வடவர் ஆதிபத்தியம், புதிய போர்க்கோலம் பூண்டிருக்கிறது; அதனுடைய ஆபத்தின் அளவையும் விளைவையும், தமிழகத்தின் மீது அக்கரையுள்ள ஒவ்வொருவரும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். ஏனையோரைவிட, ஆளும் கட்சியினராகிய காங்கிரசுக்கு, இந்த விஷயத்தில்பொறுப்பு அதிகமிருக்கிறது. என்ன செய்வார்களோ, பொறுத்திருந்து பார்ப்போம்.

★

# எந்தப் பிள்ளை மேல்?

—[அரசு]—

ஒரு கிழவருக்கு மூன்று குமாரர்கள் இருந்தார்கள். மூத்த மகன் சிறந்த மாலுமி. எதற்கும் கலங்காத நெஞ்சமும் கடமையை நிறைவேற்றுவதில் தளராத உறுதியும் கொண்டவன். அந்த முதியவருக்குப் பெரிய பிள்ளை என்றால் உயிர். பெருமையும் புகழும் அந்த மகனால் தான் என்று பூரித்துப் போவார். ஆனால் பெரும் புயல் வந்தது. அஞ்சாத அந்த வீரனைக் கொந்தளித்த கடல் கொண்டுபோய் விட்டது.

இரண்டாவது மகன் சலியாத உழைப்பாளி; சுரங்கத் தொழிலாளி. சுரங்கத்தில் வேலை செய்த எல்லோரையும்விட பலசாலி. நம்பிக்கையும் உண்மையும் உடையவன். தம் சகத் தொழிலாளர்க்கும் நண்பர்களுக்கும் உதவி செய்ய முந்திக்கொண்டு நிற்பான். அதனால் சுரங்கத்திலிருந்த அனைவருமே அவனை மதித்தார்கள். அவன் நட்புக்கு ஏங்கிக்கிடந்தனர். கிழத் தந்தைக்கு இந்த மகன் மீதும் அளவற்ற அன்பு. அதுவும் மூத்த மகன் இறந்ததும், இரண்டாவது மகனே தனக்கு சாந்தியும் சந்தோஷமும் என்று நினைத்தார்.

ஆனால், அந்த அமைதி அதிக நாள் நீடிக்கவில்லை. இரண்டாவது குமாரனின் தன்னலம் கருதாத தன்மையும் தைரியமுமே அவன் உயிரைக் குடித்தன. அன்று அவன் சுரங்கத்தில் வேலை செய்துகொண்டிருக்கையில், மேல் தளம் விரிந்து கொடுத்துச் சரிந்தது. முழு மூச்சையும் பிடித்து அந்தப் பெரியவரின் இரண்டாவது குமாரன், சரிந்த பகுதியைச் சிறிது நேரம் தாங்கிப் பிடித்தான். அதனால், தொழிலாளர்கள் தப்பிப் பிழைத்தனர். ஆனால், அவன் தப்பமுடியவில்லை — நசுங்கி இறந்தான்.

தனக்குப் பெருமைதந்த இரண்டு குமாரர்களையும் பறிகொடுத்த வயது சென்ற தந்தையின் பரிதவிப்பைச் சொல்லவும் வேண்டுமோ? மனமொடிந்து உடல் ஒடுங்கிப் போனார் அந்தக் கிழவர். ஆனால், அவருக்கு ஒரே ஆறுதல் —இன்னொரு மகன் இருக்கிறான் என்பது. வீரக் குமாரர் இருவரையும் சாகக் கொடுத்தபின் தந்தையின் கருத்து மாறிவிட்டது கடைசி மகன் அவனுடைய அண்ணன்மாரைப்போல வீரனாகவும் வேண்டாம். சூரனாகவும் வேண்டாம்; அவர்களைப்போல மடிந்து என்னைப் பதைக்கவைக்கவும் வேண்டாம் என்று கிழவர் எண்ணினார். உதவாக்கரை பிள்ளையானாலும் உயிரோடு இருந்தால் போதும் என்ற முடிவுக்கு அவர் வந்துவிட்டார்.

ஆகவே பெரியவர் தன் எஞ்சிய மகனை பக்கத்திலேயே வைத்துக் கொண்டு கொஞ்சினார். உங்கள் பாட்டிமார் சிலர் தங்கள் ‘கொசவ’த்தைப் பிடித்துக்கெண்டே பேரன், பேத்திகள் சுற்றவேண்டும் என்று “அடம்” பிடிக்கிறார்களே அதுபோல அவர் தமது ‘கடைக் குட்டி’யைக் கட்டி வளர்த்தார். அவனும் அப்பாவை ஏமாறவிடவில்லை. உதவாக்கரையாக, கோழையாக, சுயநலமியாக கொழுகொழு என்று வளர்ந்தான்.

ஆனால் ஒரு விசித்திரம். கிழத் தந்தை உள்ளம் மகிழவில்லை. முதல் இரண்டு குமாரர்களும் இறந்தபோது அடைந்ததைவிட அதிகத் துக்கமடைந்தார். பெரிய தவறுசெய்துவிட்டதாகத் தன்னையே நொந்துகொண்டார்.

‘யாருக்கும் பயன்படாதவர்களையும் திறமையற்றவர்களையுமே நான் மிகவும் வெறுத்தேன். ஆனால் என் சுயநலத்தின் விளைவாக இத்தகைய பிண்டத்தை நானே உருவாக்கிவிட்டேன். கடலும் விழுங்க மறுக்கிறது; மலையும் நசுக்க மலைக்கிறது. அப்படிப்பட்ட வாழ்வு ஏன் வாழ்கிறான் அவன்?” என அக் கிழத் தந்தை வெதும்பினார்.

எவ்வளவோ முயன்றும் உயிரோடிருக்கும் மகனிடம் கிழத் தந்தையினால் அன்பு செலுத்தமுடியவில்லை. அலைமோதிக் கொப்பளிக்கும்கடலையும், மல்லாந்து மருட்டும் மலையையும் மூத்த குமாரர்கள் இருவரைப் போன்ற மனிதர்களையுமே அக்கிழவர் பாராட்டி பாசம் செலுத்தமுடிந்தது. தாங்கொணாத துயரத்தில் தோய்ந்த அந்தப் பெரியவர் உயிரோடிருக்கிற உதவாக்கரைப் பிள்ளையோடு தீரமும் திறமையும் உடைய அற்பாயுசுப் பிள்ளைகளே மேல் என்பதை உணராமல் போனேனே என்று தலையில் அடித்துக்கொண்டார்.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

ளம் வெடித்து விடும் நிலை ஏற்படுகிறது.

எனினும், நாம் இந்தப் பெருநட்டத்தை எதிர்த்துப் போரிடும் ஆற்றல் பெற்றவர்கள் என்பதை நிலைநாட்டியாக வேண்டும். “எல்லாம் இழந்தோமே! என் செய்வோம்?” என்று கதறிடும் நமது உடன் பிறந்தார்க்கு, உடன் பிறந்தோரே! உத்தமர்காள்! குடும்பத்தில் கண்மணிகளை, கருவூலங்களை, இன்பவாரிதிகளை, இதயராணிகளை. பேசும் பொற்சித்திரங்களை, பாழும் வெள்ளத்துக்கு இரையாகக் கொடுத்துவிட்டுப் பெருந்துயரில் ஆழ்ந்திருக்கிறீர். வீடிழந்தோம், வயலிழந்தோம், உடைமை அனைத்தையும் இழந்தோம், வாழ்விழந்தோம் என்று கூறிடுவீர், உண்மை, உண்மை, முற்றிலும் உண்மை—ஆனால் அன்பர்காள்! எல்லாம் இழந்தீர் எனினும், எம்மை இழந்துவிடவில்லை —உமக்கு வாழ்வளிக்க நாங்கள் இருக்கிறோம்— எமது ஆற்றல் மிகுதியானதன்று, ஆயினுமென், இதயத்தில் பொங்கி எழும் உணர்ச்சி எமது ஆற்றலைப் பன்மடங்கு அதிகமாக்கிடும், அறிவீர்! ஊரெங்கும் செல்கிறோம், உற்ற ‘உற்பாதத்தை’ எடுத்துரைக்கிறோம், காண்போரிடமெல்லாம் கை ஏந்தி நிற்கிறோம். கன்னெஞ்சக்காரனையும் கனியவைக்கிறோம். ஓயமாட்டோம், உறங்கமாட்டோம், உதவி திரட்டும் ஓராயிரம் வழிகளையும் கண்டறிந்து பணியாற்றுவோம்! நேரிட்ட கொடுமைக்குப் பரிகாரம் தேடிட கட்சிகளை மறந்து காரியத்தில் ஈடுபடுவோம். ஆடுவோம்! பாடுவோம்! ஊரூருக்கும் ஓடுவோம்! எப்பாடுபட்டேனும் உதவி திரட்டும் பணியில் வெற்றிபெற்றுத் தீருவோம். மீண்டும் உமக்கு வாழ்வு — முன்பு நீவிர் கண்டனுபவித்த குதூகலம் குறைந்துபடினும்—வாழ்வு செம்மையாக அமைவதற்கான எல்லா முயற்சியையும் எடுத்துக்கொள்ளத் தயங்கப் போவதில்லை — என்று நாமனைவரும், தம்பி! எடுத்துக் கூறிட வேண்டும்.

நாட்டிலே எந்த அளவுக்கு நற்பண்பு இருக்கிறது என்பதை நாமெல்லாம் உணரத்தக்க வகையில், உதவி திரட்டிக் குவித்திடும் காரியம் வேக வேகமாகவும், வகைவகையாகவும் நடை பெற்றுக்

கொண்டு வருகிறது. ஏழை எளியோரின் கஷ்ட நஷ்டத்தை நன்குணர்ந்த ஓர் நல்லவர் நாடாள்கிறார், வழக்கமாக ஆமைவேகத்தில் நகர்ந்து செல்லும் நிர்வாக இயந்திரமே இன்று புயல் வேகத்தில் பணியாற்றிடக் காண்கிறோம். அள்ளித்தர செல்வர்களுடன் சாமான்யர்கள் போட்டியிடுகின்றனர்.

தம்பி! நமது கலைச்செல்வர்கள் கருணை உள்ளம் கொண்டவர்கள் என்று சென்ற இதழிலே குறிப்பிட்டிருந்தேன், காண்கிறாயல்லவா, அவர்தம் கொடைத்திறனை!

இன்று அந்த கலைச்செல்வர்கள், வைரம் மின்னிட, தங்கம் ஒளிவிட, தந்தக்கட்டிலில் அமர்ந்து வெள்ளி வட்டிலில் இனிப்புப் பண்டம் வைத்து உண்டு மகிழத் தக்க நிலை பெற்றவர், எனினும் அவர்களில் எல்லோருமே, இல்லாமை கொட்டுவதை, வறுமை வாட்டுவதை அனுபவித்து அறிந்தவர்கள். ஏழையின் இதயக் குமுறலை நன்கு தெரிந்தவர்கள். கருணை அவர்கள் உள்ளத்தில் நிச்சயம் சுரக்கத்தான் செய்யும். ஆகவே, அவர்களிடம் எனக்கு நிரம்பநம்பிக்கை உண்டு. சென்ற கிழமை அவர்கள் கூடி நிதி திரட்டத் துவங்கினர்; துவக்கக் கட்டமே வெற்றி அளித்திருக்கிறது; தொடர்ந்து பணியாற்றுவர்; அவர்தம் பணியின் பலன், அழிந்ததுபோக மீதமிருக்கும் வலிவுகொண்டு வாழ்வுடன் போராடி, உழைப்பால் மீண்டும் பொலிவு பெறும் ஏழை எளியவருக்கான அழகிய குடில்களாக காட்சிதரட்டும், அழிவு தோற்றோடட்டும்! நாசத்தின் கோரப் பற்களால் ஏற்பட்ட புண் ஆற்றிடும் மாமருந்து கிடைக்கட்டும்.

நமது அருமருந்தன்ன நண்பர் எம். ஜி. ராமச்சந்திரன், மதுரையம்பதி கடைவீதியில் சென்று, கை ஏந்தி நின்றுப் பணமும் பண்டமும் கேட்டுப் பெற்று உதவினார் என்றோர் செய்திகேட்டு, இத்தகு இதயம் படைத்தவரை, நண்பராகப் பெற்றிருக்கிறோமே, நமது கழகத்தினராகவும் கொண்டிருக்கிறோமே என்பது எண்ணிப் பெருமைப்படுகிறேன்—பெருமைப்படுகிறேன்

கலைச் செல்வர்களின் பணி, உண்மையிலேயே போற்றுதற்குரியதாக அமைந்திருக்கிறது' எனினும்......

ஆமாம், தம்பி! எனினும் என்று கூறத்தான் வேண்டி இருக்கிறது—ஏனெனில் அவர்கள் மூலம்தான் பல இலட்சங்கள் இந்த நற்காரியத்துக்கு, கேடு சூழ்ந்துள்ள நாட்டினை மீட்டிடும் தூய தொண்டுக்கு, கிடைத்தாக வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். தமது இசையாலும் நடன மூலமும், நாடக படக் காட்சி மூலமும் நாட்டு மக்களுக்கு இன்பமும் நல்லறிவும் தந்துதவு பவரிடம் நான் சில பல இலட்சங்களை எதிர்பார்ப்பதிலே என்ன தவறு? அவர்கள் அறிவார்கள் அல்லலுறும் மக்களின் அவல நிலையைப் போக்குவதற்கு எடுத்துக் கொள்ளவேண்டிய முயற்சி எவ்வளவு மாமலை போன்றதென்பதை. எனவே நம்பிக்கையுடன் நாடு அவர்கள் உதவியை நாடலாம்.

என்ன செய்ய நண்பரே! ஒன்று இரண்டு என்று இன்று ஆயிரக் கணக்கில் கொடுத்திருக்கிறோம்—இன்னும் என்ன செய்ய? அங்காடிகளில் சென்று வசூலிக்கவா, இசை அரங்குகள், கலா நிகழ்ச்சிகள், திறந்த வெளி நாடகங்கள் மூலம் நிதி திரட்டவா? என்று கேட்பர்; இவைகள் மூலமெல்லாம் திரட்டத்தான் வேண்டும்-இன்றே துவங்கி; தொடர்ந்து; ஆனால், இம்முறையில் பணம் குவிய, பாடும் அதிகம், காலமும் மிகுதியாகத் தேவைப்படும்.

மதுரை அங்காடியிலே நமது நண்பர் இராமச்சந்திரன் சென்ற காலை, நேரிட்டது என்ன? உதவியும் உபத்திரவமும், தோழமையும் தொல்லையும், நேசப்பான்மையும் நெருக்கடியும் போட்டியிட்டு, அவர் மேற்கொண்ட பொறுப்பான காரியத்தைக்குலைத்தேவிட்டது. நடிகர்கள் அங்காடி சென்றாலே இது! நட்சத்திரங்கள் சென்றாலோ!!

எனவே, நமது கலைச் செல்வர்களுக்கு நானோர் யோசனை கூறுவேன்.

N. S. கிருஷ்ணன்
M. K. ராதா
M. R. ராதா
K. R. ராமசாமி
M. G. ராமச்சந்திரன்
T. K. சண்முகம்
T. K. பகவதி
சிவாஜி. கணேசன்
ஜெமினி, கணேசன்
S. S. ராஜேந்திரன்

இப்படிப்பட்ட கலைச்செல்வர்கள் (பட்டியல் பூர்த்தியானதல்ல.)

T. R. ராஜகுமாரி
லலிதா
பாலுமதி
பத்மினி
அஞ்சலி
வரலட்சுமி
T A. மதுரம்

போன்ற கலைச்செல்வியர்கள் இவர்கள்யாவரும், ஒருசேரஒரேபடத்தில் நடித்தால்......!

எந்த முதலாளிக்காகவுமல்ல, தாயகத்தின் தவிப்பைப் போக்குவதற்கு, நாலு அல்லது ஐயாயிரம் அடி அளவிலே அமைத்துவிட்டாலும் போதும், பத்தே நாளில் படம் தயாரித்து, அதனை, கலைச்செல்வர்களின் அன்புக் காணிக்கையாகப் படைத்தால்.....இலட்சங்கள் புயல் வேகததில் குவியும்.

இந்த நற்காரியத்தை ஒரு நடிகர் குழு மேற்கொண்டால், எந்தப்படம் தயாரிக்கும் அமைப்பும் இலவசமாக வசதிகளைச் செய்தளிக்கும்.

ஆர்வத்துடன் பணியாற்றினால் இரண்டு வாரத்தில், படம் தயாராகிவிடும்.

இத்தனை கலைச் செல்வர்களையும் ஒரே படத்தில் காணும் வாய்ப்பு.

இவர்கள் அனைவரும் ஒரு தூய காரியத்துக்கு இந்தப் படத்தை அர்ப்பணிக்கிறார்கள் என்ற மதிப்பு.

இவை போதும், இலட்சங்களைக் கொண்டு வர!

இதற்கென்று ஒரு கதை— அதிலே பல கட்டங்கள் — இது அல்ல நான் குறிப்பிடுவது.'

சலிப்பாக இருக்கிறது என்று கூறிக் கண்ணை மூடிக்கொள்கிறோமல்லவா, சர்க்கார் வெளியிடும் சில செய்திப் படங்கள்.

நான் குறிப்பிடுவது செய்திப் படம் போன்றது—ஆனால், செய்திப் படத்தைச் சர்க்கார் வெளியிடுகிறார்களே அத்தகைய சத்தற்ற, சாரமற்ற விதத்தில் அல்ல.

கொடுமைக் காட்சிகள்—அவை பற்றி நமது கலைஞர்கள், நாட்டு மக்களிடம் முறையிடுதல்.

நாட்டுக்கு இத்தகைய நெருக்கடிகள் தாக்கும்போது, மக்கள் காட்ட வேண்டிய வீர உணர்ச்சி, தியாக உள்ளம்.

இழப்புகளுக்கு ஆளாகியிருப்போருக்கு ஆறுதல் மொழி.

REGD No. M. 4642 திராவிடநாடு போன் நெ. 15.

இவ்வகையிலே படம் அமையலாம்.

முறை அல்ல முக்கியம் — என் மனம் இருக்கும் நிலையில் அது பற்றித் தெளிவுகூட இல்லை என்னிடம் — நான் விரும்புவது, கலைச் செல்வர்களின் முயற்சி, இப்படியோர் அன்புப் படையலாக இருத்தல் வேண்டும் என்பது.

நிதி குவியவும், வேகமாகக் குவியவும், தக்க பலன் தரக்கூடிய அளவில் குவியவும், இது நல்ல முறை என்று எண்ணுகிறேன்.

சர்க்கார் இதற்கு 'வரி' இல்லாமல் விலக்களிக்க வேண்டும்.

கலைச் செல்வர்கள் கூடிக் குழு அமைத்தால் ஒரு திங்களில், பலன் பூத்துக் காய்த்துக் கனியும்; நாடு சுவையும் பயனும் பெறும்.

தம்பி! கலைச்செல்வர்களுக்கு, நான் கூறிடும் இந்தக் கருத்து, சரி என்று உனக்கும் தோன்றினால், நீயும் அவர்களிடம் சொல்லு.

சரி, அது போதுமல்லவா அண்ணா! என்று கூறிவிட்டு வேறு காரியத்தில் மூழ்கிவிடாதே. வாழ்விழந்து வதைபடும் நமது தோழர்களைக் கைதூக்கிவிட முயற்சியில் ஈடுபட்டவண்ணம் இருக்கவேண்டும். ஒரு படி அரிசி, ஒரு சிறு துண்டு......ஒரு சிறுபணமுடிப்பு—தம்பி! "எது பெறமுடிந்தாலும், அதற்காகக் காடு கடந்திட வேண்டுமாயினும், பரவாயில்லை, பெற்று வரவேண்டும்—இத்தகைய 'உதவிகளை' அவரவர்கள் தனித்தனி அமைப்பு ஏற்படுத்திக் கொண்டு திரட்டுவது, நமது நிதி அமைச்சருக்குப் பிடிக்கவில்லை — கிடக்கட்டும்—அவர் நாட்டு மக்களின் அமைப்புகளை நம்பவில்லை—நாம் அவரை நம்புவோம், நஷ்டமில்லை — அவர் குறிப்பிடும் இடங்களுக்கே வேண்டுமாயினும் அனுப்பிவை. நானும் அதே பணியில் என்னாலான அளவு ஈடுபட்ட வண்ணம் இருக்கத்தான் செய்கிறேன்.

அன்பன்,

**அண்ணாத்துரை.**


கலை ஏடு!

## திராவிட நாடு

# பொங்கல் மலர்

★

**சி. என். ஏ.**

தீட்டும்

**சிந்தனைச் சித்திரங்கள்**

**அறிவுலகக் கட்டுரைகள்**

★

சிறு கதைகள்

ஓவியங்கள்

ஒப்பற்ற கருத்துக் குவியல்கள்

★

**120 பக்கங்கள்**

அத்தனையும்

**எழிலும் அறிவும் மணக்கிறது!**

★

இன்றே உங்கள் பிரதிகளுக்கு ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்.

இந்த ஆண்டு பொங்கல் மலர், உங்கள் நூலகத்துக்கோர் அறிவுக் களஞ்சியம்.

★

**விலை ரூ. 1-8-0**


காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு ''திராவிட நாடு'' அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.